

# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் - 17 இதழ் - 9 செப்டம்பர்- 2004

வெளியிடுவோர்


**கிறிஸ்துவின் சபை**

தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701.
தமிழ்நாடு. இந்தியா

04257-230030 Cell : 98427-30382, 98428-30382
E-mail : kangayamcofc@eth.net

# BIBLE MEDITATION

**TV PROGRAM**





## ஆசானின் அறிவுரையில் ...


1. ஆசிரியர் உரை ........ 1
2. இன்றைக்கு ஏன் ஒரே ஞானஸ்நானம் இருக்கிறது? ........ 10
3. பெண்கள் பகுதி ........ 14
4. வாலிபர் பகுதி ........ 18
5. சிறுவர் பகுதி ........ 21
6. விசுவாசத்தின் அடிப்படைகள் ........ 24
7. அன்பு வேதனை கொடுக்கும் ........ 29

# THIRUMARAI AASAAN

**Published by Church of Christ**

S. Rajanayagam — **Editor**

J.C. Choate — **Honorary Editor**

Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.

**Pleading for the restoration of pure New Testament Christianity**

**Vol. 17 September - 2004 Issue - 9**


ஆசிரியர் உரை

## பிறவிக் குருடனைப் போலிருப்போம்

நம் எல்லோருக்கும், ஓர் நினைப்பு பொதுவாக உண்டு. அது, நம்முடைய வாழ்வில், நமக்கு யாராவது புத்தியோ, அறிவுரையோ, ஆலோசனையோ சொல்ல வேண்டுமானால், அவர்கள் நம்மைக் காட்டிலும் எல்லா வகையிலும் சிறந்தவராகவும், தகுதியுள்ளவராகவும் இருக்க வேண்டுமென்பது. மேலெழுந்த வாரியாகப் பார்க்கும்போது இப்படி நினைப்பதில், பெரிதாகத் தவறு இருப்பது போலும் தெரியவில்லை. எப்படியெனில், நம்மைக் காட்டிலும் சிறந்தவர்களால் தான், நம்முடைய குறைகளைச் சுட்டிக் காட்டவும், தவறுகளைத் திருத்தவும், பெலவீனங்களில் ஆலோசனை கொடுக்கவும் முடியும். இதுவரை இந்த நினைப்பு சரிதான். ஆனால், இந்த நினைப்பு, சில நேரங்களில், தன் எல்லை கடந்து செல்லும் போது தான், கொஞ்சம், கொஞ்சம் என்ன நன்றாகவே உதைக்க ஆரம்பிக்கிறது.

ஆம், நமக்கு புத்தியோ, அறிவுரையோ, ஆலோசனையோ சொல்லுகிறவர்கள் அறிவிலும், ஆற்றலிலும், அனுபவத்திலும் மாத்திரம் மேம்பட்டவர்களாக இராமல், சரீர அமைப்பிலும் கூட குறையற்ற வர்களாகவும், எடுப்பான தோற்றம் கொண்டவர்களாகவும் இருக்க வேண்டுமென்று எதிர்பார்க்க ஆரம்பித்து விடுகிறோம். பிரச்சனை இங்கே

தான் ஆரம்பமாகிறது. ஊனமற்ற உடல்வாகும், கவர்ச்சியான தோற்றமும், ஒரு காலத்தில் நாடகம், சினிமா போன்றவைகளுக்கு அத்தியாவசியம் என்ற நிலை இருந்தது. அது, அப்படியே மெல்ல நகர்ந்து, அரசியல் உலகிலும் மூக்கை நுழைத்து ஆதிக்கம் செய்ய ஆரம்பித்தது, இப்பொழுது, மதஉலகையும் தன்னுடைய கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து கொண்டிருக்கிறது. இந்நிலைக்கு, ஏழ்மைக் கோலத்திலும், அடிமையின் ரூபத்திலும் பூமிக்கு வந்த கிறிஸ்துவின் பெயரைத் தாங்கி நிற்கும் கிறிஸ்தவமும், விதிவிலக்காக இல்லையென்பதுதான் வேதனையிலும் வேதனையாக உள்ளது.

கிறிஸ்தவ உலகை உன்னிப்பாக கவனிப்பவர்களுக்கு, இது பயத்தையும், கலக்கத்தையும் ஏற்படுத்துகிறதாகவே இருக்கும். எப்படியெனில், அழகை ஆராதித்த சினிமா உலகில், ஒழுக்கமும் கற்பும் தொலைந்து வெகுகாலமாகி விட்டது. எடுப்பான தோற்றத்தை தயக்க மில்லாமல் ஏற்றுக்கொண்ட அரசியல் உலகில், நேர்மையும், நியாயமும் மாயமாய் மறைந்துவிட்டது. இப்பொழுது, ஒட்டுமொத்த மதஉலகிலும், சீர்கேடுகளுக்குப் பஞ்சமில்லை என்ற நிலை என்றைக்கோ தோன்றிவிட்டது. இதுதான் யதார்த்த நிலையென்றால், பிசாசின் வஞ்சக வலையில் சிக்கி விட்ட கிறிஸ்தவத்தில் பரிசுத்த ஜீவியமும், வசனத்தின் படியான இரட்சிப்பின் வாழ்வும் மாத்திரம் எவ்வளவு காலத்திற்கு தப்பித்து தாக்குப்பிடித்து விடமுடியுமென்று எண்ணுகிறீர்கள்?

கிறிஸ்தவத்தில் மெய்பக்தி அருகிவருவதும், வசனத்தின் படியான பரிசுத்த வாழ்வு மங்கி வருவதும் கண்கூடான உண்மை. இந்தக் கைப் புண்ணுக்கு கண்ணாடி தேவையில்லை. இதற்கு என்ன காரணம்?. இதற்கு பல காரணங்கள் இருந்தாலும், நமக்குப் பளிச்செனத் தெரிகிற காரணம் வேத வசனங்களை நாம் கவனமாய் படிக்காததே ".. நம்முடைய இரட்சகர் சொல்லுகிறார், "வேத வசனங்களை ஆராய்ந்து பாருங்கள், அவைகளால் உங்களுக்கு நித்திய ஜீவன் உண்டு" என்று (யோவான் 5:39) அவர் சொல்லும் நித்திய ஜீவனுக்கு, "ஆ" வென்று வாயைத் திறக்கும் நாம் அது குறித்துப் படிப்பதற்கும், அதைப் பெற்றுக்கொள்ள தியானிப்பதற்கும் வாயை இறுக மூடிக்கொள்கிறோமே, அது ஏன்? நம்முடைய இரட்சகர் சொல்லுவதை ஏற்றுக்கொள்ளாமலே, அவரால் நமக்கு நன்மை கிடைக்க வேண்டுமென்று எதிர்பார்க்கிறோமே? அது எப்படி நியாயமாகும்? நம்முடைய இரட்சகர் என்ன அவ்வளவு ஏமாளியா? அவர்மேல் பற்றுள்ளது போல பாசாங்கு செய்யும் அனைவருக்கும் பரலோகத்தில் இடம் தருவதற்கு! சொல்லுங்கள்.

நம்முடைய இரட்சகர் ஆராய்ந்து பாருங்கள் என்று சொல்லியிருப்பதாலும் ஒரு நபரின் தோற்றத்தைப் பார்த்து, அவரை ஒதுக்கக்கூடாது என்று நாம் இப்பொழுது உணர்ந்திருப்பதாலும், வேதாகமத்தில் இடம் பெற்றுள்ள ஒரு பிறவிக் குருடனை வைத்து சில பாடங்களைக் கற்றுக் கொள்ள முயற்சிப்போம்.

ஒரு குருடனிடமிருந்து, அதுவும் பிறவிக் குருடனிடமிருந்து கற்றக் கொள்வதற்கு என்ன இருக்கிறது என்று நாம் எண்ண வேண்டாம். ஏனெனில் நம்முடைய காலில் மிதிபடுகின்ற எறும்பினிடமிருந்து கற்றுக்கொள்ளுங்கள் (நீதி 6:6) என்றும், தலைக்கு மேலே சுற்றித்திரிகின்ற காகங்களை கவனித்துப் பாருங்கள் (லூக்:12:24) என்றும் தேவன் சொல்லியுள்ளார். ஆகவே, நாம் கவனித்துப்பார்த்துக் கற்றுக்கொள்ள வேண்டும்.

இந்த பிறவிக் குருடன் பற்றிய காரியம் யோவான் 9-ம் அதிகாரத்தில் இடம் பெற்றுள்ளது, ஒருவேளை, நம்முடைய இரட்சகரால் குருடர்கள் குணமாக்கப்பட்டது சுமார் ஆறு இடங்களில் புதிய ஏற்பாட்டில் இடம் பெற்றிருந்தாலும், இந்தக் குருடனின் காரியங்கள் பலவகைகளில் கொஞ்சம் தனித்து நிற்கிறது. ஆம், பிறவியிலேயே குருடாகப் பிறந்து சுகம் பெற்றவன் இவன்தான். அடுத்து, மற்றவர்களையெல்லாம் வார்த்தையின் வல்லமையாலும், தொட்டும் குணமாக்கின இயேசு, இவன் விஷயத்தில் மாத்திரம், நாமெல்லாரும், ஏன் இப்படி என்று கேட்கக் கூடிய வகையில், உமிழ்நீரினால் சேறுண்டாக்கி, அவன் கண்களில் பூசி, பட்டணத்தின் தென்கிழக்கு மூலையிலிருந்த சீலோவாம் குளத்திலே போய்க் கழுவு என்று சொல்லியுள்ளார் (9:6,7) அதுமாத்திரமல்ல, மற்ற குருடர்கள் சம்பந்தப்பட்ட காரியங்கள் ஒரு சில வசனங்களில் மாத்திரம் சொல்லப்பட்டிருக்கும் போது, இவன் சுகம் பெற்ற சம்பவம் மாத்திரம் ஓர் அதிகாரம் முழுவதும் பரம்பிக் கிடக்கிறது. அச்சம்பவத்தை இங்கே பார்ப்போம்.

சரி, ஒரு சமயம் அவர் அப்புறம் போகையில், பிறவிக் குருடனாகிய ஒரு மனிதனைக் கண்டார் (யோவா 9:1) அப்பொழுது, அவரோடு கூடவே அந்நாட்களில் சுற்றித் திரிந்த சீடர்கள், "ரபீ, இவன் குருடனாய்ப் பிறந்தது, இவன் செய்த பாவமா அல்லது இவனைப் பெற்றவர்கள் செய்த பாவமா?" என்று கேட்டனர். இயேசுவின் சீடர்கள் இப்படிக் கேட்டது நமக்கு நன்றாகவே விளங்கும். ஏனெனில், சரீரக் குறைபாடுகள் பெரும்பாலும் பாவத்தின் விளைவு என்றும், சாபத்தின் அடையாளம் என்றும் இன்றளவும் நம்பப்படுகிறது. ஆகவே, அவர்கள் இப்படிக் கேட்டதில் ஆச்சரியப் படுவதற்கு ஒன்றுமில்லை. இயேசு பிரதியுத்தரமாக அது இவன் செய்த பாவமுமல்ல, இவனைப் பெற்றவர்கள் செய்த பாவமுமல்ல "**தேவனுடைய கிரியைகள்** இவனிடத்தில் வெளிப்படும் பொருட்டு இப்படிப் பிறந்தான்" என்று சொன்னார்.

பிறகு, அவனுடைய **கீழ்ப்படிதலை சோதிக்கும்படியான** ஒரு காரியத்தை, ஒரு வேளை, அவனுக்குக் கொஞ்சம் சிரமமாக இருந்தாலும், அவனால் செய்ய முடிகின்ற ஒன்றைச் செய்யச் சொல்லி, அதன் மூலம் அற்புத சுகம் கொடுத்தார்.

இவன், பிறவிக் குருடனாயிருந்து, எருசலேமில் வெகுஜனங்கள் கூடுகின்ற இடத்தில் பிச்சை கேட்கிறவனாயிருந்தபடியால், கிட்டத்தட்ட எல்லோராலும் அறியப்பட்டவனாகவே இருந்துள்ளான். ஆகவே, இவன் பெற்ற அற்புத சுகம், அநேகருடைய புருவத்தை உயரச் செய்திருக்கிறது. "………இவன் உட்கார்ந்து பிச்சை கேட்டுக்கொண்டிருந்தவனல்லவா?" என்று ஆச்சரியத்துடன் சொல்லியுள்ளனர் (9:8) அது மாத்திரமா, இவனுக்குக் கிடைத்த சுகத்தின் தன்மை, குருடனாக இருந்தவன் இவன்தானா என்ற சந்தேகத்தை வேறு கிளப்பியுள்ளது!

அதுமுதல், அவன் சில கேள்விக்கணைகளை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. முதல் கணை, அவன் குருடனாயிருக்கையில் அறிந்தவர்களிடமிருந்து வந்தது, "**உன் கண்கள் எப்படித் திறக்கப்பட்டது**" என்றார்கள் (வ.10) அவன் பிரதியுத்தரமாக; இயேசு என்னப்பட்ட ஒருவர் சேறுண்டாக்கி என் கண்களின் மேல் பூசி, நீ போய் சீலோவாம் குளத்திலே கழுவு என்றார். அப்படியே நான் போய்க் கழுவி, பார்வையடைந்தேன் என்றான் (வ. 11) அடுத்த கேள்வி "**அவர் எங்கே?**" என்பது (வ. 12) பிறகு, அவன் யூத மார்க்கத்தின் மடாதிபதிகளாக இருந்த பரிசேயரிடத்தில் கொண்டு போகப்பட்டான். அவர்கள், "**நீ எப்படிப் பார்வையடைந்தாய்?**" என்றார்கள். அதற்கு அவன், இயேசு என் கண்களின்மேல் சேற்றைப் பூசினார், நான் கழுவினேன்; காண்கிறேன் என்றான் (வ. 15) இருதயத்தில் மந்தமுள்ள அந்த சுய நீதிக்காரர்கள், மறுபடியும், அவனை நோக்கி, உன் கண்களைத் திறந்தானே, அவனைக் குறித்து, **நீ என்ன சொல்லுகிறாய்?** என்றார்கள் அதற்கு அவன், அவர் ஒரு தீர்க்கதரிசி என்றான் (வ. 17)

"அவர் ஒரு தீர்க்கதரிசி" என்று அவன் அழுத்தம் திருத்தமாகச் சொன்னதைப் பார்த்து, இனி இவனைத் தங்கள் வழிக்குக் கொண்டு வரமுடியாது என்று எண்ணி, தங்கள் கவனத்தை, அவன் பெற்றோரிடம் திருப்பினர். அவர்களோ, "கழுவுகிற மீன்களில் நழுவுகிற மீன்களாயிருந்தனர்". ஆம், "உங்கள் குமாரன் குருடனாய்ப் பிறந்தான் என்று சொல்லுகிறீர்களே, அவன் இவன் தானா? இவனானால், இப்பொழுது இவன் எப்படிப் பார்வையடைந்தான்?" என்றார்கள் (9:19) "அவர்களோ, இவன் எங்கள் குமாரன் தான் என்றும், குருடனாய்ப் பிறந்தான் என்றும் எங்களுக்குத் தெரியும். இப்பொழுது, இவன் பார்வையடைந்த வகை எங்களுக்குத் தெரியாது; இவன் கண்களைத் திறந்தவன் இன்னான் என்பதும் எங்களுக்குத் தெரியாது; இவன்

வயதுள்ளவனாயிருக்கிறான், இவனைக் கேளுங்கள், இவனே சொல்லுவான்" என்றார்கள் (வ. 20-21) யூதர்களுக்குப் பயந்ததினால் இப்படிச்சொன்னார்கள் (வ. 22)

தங்களுடைய இரண்டு முயற்சியிலும் படுதோல்வி கண்ட இந்த பரிசேயர், கொஞ்சமும் வெட்கமில்லாமல், குருடனாயிருந்த மனுஷனை இரண்டாந்தரம் அழைத்து; "**நீ தேவனை மகிமைப்படுத்து; இந்த மனுஷன் பாவியென்று நாங்கள் அறிந்திருக்கிறோம்**" என்றார்கள் (வ.24) அவன் அதற்கும், சளைக்காமல், ஒரே போடாகப் போடுகிறான்; "அவர் பாவியென்று எனக்குத் தெரியாது; நான் குருடனாயிருந்தேன், இப்பொழுது காண்கிறேன்; இது ஒன்று தான் எனக்குத் தெரியும்" என்றான் (வ.25) இப்பொழுதாவது, இந்த மத மேதாவிகளுக்குக் கொஞ்சம் உறைத்திருக்க வேண்டாமா? உறைக்கவில்லை, "**மறுபடியும், அவனை நோக்கி; உனக்கு என்ன செய்தான்? உன் கண்களை எப்படித் திறந்தான்?**" என்றார்கள் (வ. 26)

பொறுத்துப் பொறுத்துப் பார்த்த நம்ம ஆள், எதிர்க்கேள்வி கேட்க ஆரம்பிக்கிறான். ஆம், "**அவருக்குச் சீஷராக உங்களுக்கும் மனதுண்டோ?**" என்றான் (வ. 27) இன்றைக்கும் கிறிஸ்தவ உலகில், அநேகர், வெட்டிப் பெருமை பேசுவது போல, அந்த மடாதிபதிகளும், "**நீ அவனுடைய சீஷன், நாங்கள் மோசேயினுடைய சீஷர்**" என்றார்கள். மோசே பெரியவரா? இயேசு பெரியவரா? என்று தெரியாதவர்கள் அன்றைக்கு மதத் தலைவர்கள் என்ற அந்தஸ்தோடு ஒய்யாரமாக பவனி வந்திருக்கிறார்கள். எவ்வளவு கொடுமை பாருங்கள். அதே அவலநிலை தானே இன்றும் நீடிக்கிறது. மோசேயின் பிரமாணத்துக்கும், கிறிஸ்துவின் பிரமாணத்திற்கும் வேறுபாடு தெரியாமல், கிறிஸ்தவம் தடுமாறிக் கொண்டு தானே இருக்கிறது! எந்தப் பிரமாணம் பெரிது, எது இன்றைக்கு நம்மை வழி நடத்தக்கூடியது என்று புரியாமல், இரண்டையும் போட்டுக் குழப்பிக் கொண்டு இருக்கிறது! என்றைக்கு விடிவு வரப்போகிறதோ?

அவர்களின் பெருமையான பதிலைக் கேட்ட இவன், ஒரு **குட்டிப்பிரசங்கத்தை** அழகாகச் செய்கிறான் (வ 30-33) "அவர்கள், அவனுக்குப் பிரதியுத்தரமாக; முழுவதும் பாவத்தில் பிறந்த நீ எங்களுக்குப் போதிக்கிறாயோ என்று சொல்லி, அவனைப் புறம்பே தள்ளி விட்டனர்". தொடர்ந்து நாம் கீழே வாசித்தால், அந்த அற்புதம் செய்யப்பட்டதின் நோக்கமும், அவர் பூமிக்கு வந்ததன் நோக்கமும் தெளிவாக வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. "அப்பொழுது, இயேசு; காணாதவர்கள் காணும்படியாகவும், காண்கிறவர்கள் குருடராகும்படியாகவும் நியாயத் தீர்ப்புக்கு நான் இந்த உலகத்தில் வந்தேன்" என்றார் (யோவான் 9:39)

சரி, இப்பொழுது இந்த பிறவிக்குருடன் சம்பந்தப்பட்ட சம்பவத்திலிருந்து நமக்குக் கிடைக்கும் பாடங்கள் என்னவென்று பார்ப்போம்.

## I பிறவிக் குருடனின் கீழ்ப்படிதலுள்ள விசுவாசம் (வ.7)

பிறவிக் குருடன் சுகமாக்கப்பட்ட நிகழ்வு நமக்குக் கற்றுக்கொடுக்கும் முதல் பாடம், தேவனிடத்திலிருந்து ஒருவன் நன்மையைப் பெற்றுக் கொள்வதற்கு கீழ்ப்படிதலுள்ள விசுவாசமுடையவனாயிருக்க வேண்டுமென்பது.

இயேசு அவனுக்கு சுகமளித்த அந்த நிகழ்வை நீங்கள் அப்படியே உங்கள் மனக்கண் முன் கொண்டு வாருங்கள். அவனோ பிறவிக் குருடன் தட்டுத்தடுமாறி நடப்பதற்குக்கூட சிரமப்படுகிறவன். அவன் கண்களிலே மீண்டும் சேறு. அதுவும் பசை போன்ற சேறு. பிறவிக் குருடனின் கண்களில் சேற்றைப் பூசுவதும், பூசாமலிப்பதும் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தப் போவதில்லையென்பது உண்மைதான். இருப்பினும் கூட, அது அவனுடைய மனநிலையை பாதிக்கக் கூடியதாகவே இருந்திருக்கும். இதுவும் போதாதென்று அவனைப் போய், பட்டணத்தின் தென்கிழக்கு மூலையில் இருக்கக்கூடிய குளத்திலே போய்க் கழுவு என்று வேறு சொல்லுகிறார்.

உண்மையைச் சொல்லுங்கள். நாமாக இருந்தால் என்ன செய்திருப்போம்? கேள்விமேல் கேள்வி கேட்டு, அன்பின் உருவமாகிய அவரையே எரிச்சலடைய வைத்து, சாதனை புரிந்திருப்போம். அப்படித்தானே. ஆனால், இவனோ இரட்சகரின் வார்த்தைகளை அப்படியே ஏற்று விசுவாசித்துக், கீழ்ப்படிந்து, தன் வாழ்வில் தான் நினைத்தே பார்க்க முடியாத நன்மையைப் பெற்றுக்கொண்டான். கீழ்ப்படிதலுள்ள விசுவாசம், இருளடைந்திருந்த அவன் வாழ்வை ஒளியடையச் செய்தது. பழைய ஏற்பாட்டில், ராஜாக்களின் நாட்களில் வாழ்ந்த படைத்தளபதி நாகமான், ஆரம்பத்தில் சற்று சண்டித்தனம் செய்தாலும், பிறகு, தேவனுடைய மனிதனின் வார்த்தையின்படியே யோர்தானில் ஏழுதரம் மூழ்கி சுகம் பெற்றான் (IIராஜா 5:14) இங்கே தேவனுடைய மனிதனின் வார்த்தை என்று வசனம் சொன்னாலும், உண்மையில் அது தேவனுடைய வார்த்தை தான். அப்படியானால், இந்த இரண்டு சம்பவங்களிலும் தேவனுடைய வார்த்தையின் மகத்துவத்தையும், இயேசுவின் வார்த்தைகளுக்கிருந்த வல்லமையையும் பாருங்கள்!

இதை வாசிக்கின்ற அருமையானவர்களே, நம்முடைய விசுவாசமும், கீழ்ப்படிதலும் எப்படிப்பட்டதாயிருக்கிறது? இந்த பிறவிக் குருடன் விசுவாசம் போன்று, இயேசுவின் வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து

கழுவப்பட்டு சுகமடைகின்ற விசுவாசமாக உள்ளதா? அல்லது யாக்கோபு ஆசிரியர் சொல்லுவது போல, விசுவாசித்து, பிறகு அவர் சொல்லுகிறபடி செய்யாத பிசாசின் விசுவாசம் போலுள்ளதா? (யாக் 2:19) இல்லையில்லை, என் விசுவாசமெல்லாம் அபாரம் என்று சொல்லுவோமானால், "விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்" (மாற் 16:16) என்று சொல்லியிருக்கிறாரே, அதற்குக் கீழ்ப்படிந்து விட்டோமா? அவன் பார்வையடைய, கழுவப்படுதல் அவசிய மாயிருந்தது போல, நாம் பாவத்திலிருந்து இரட்சிப்படைவதற்கு கழுவப்படவேண்டியது அவசியம். பாவமன்னிப்புக் கென்று இயேசுவின் வார்த்தைகளை விசுவாசித்து, அந்த வார்த்தைகள் சொல்லும் அனைத்திற்கும் கீழ்ப்படிந்து, அதாவது (மாற் 16:16) மனந்திரும்பி (அப் 2:38) அறிக்கையிட்டு (ரோமர் 10:9-10) பிறகு, தண்ணீரில் மூழ்கி கழுவப்பட வேண்டும் (அப் 22:16) இதை நாம் இதுகாறும் செய்யாமலிருப்போமானால், இந்தப் பிறவிக் குருடனிடமிருந்து பாடம் கற்றுக் கொள்ளுவோம்.

## II பிறவிக் குருடன் இயேசுவுக்காகப் பேசினான் (9:10,11)

பிறவிக் குருடன் சுகமாக்கப்பட்ட நிகழ்வு நமக்கு கற்றுக் கொடுக்கும் இரண்டாவது பாடம், விசுவாசித்துக் கீழ்ப்படிந்து, அற்புத நன்மையைப் பெற்றுக் கொண்ட இவன், இயேசுவுக்காகப் பேசினான் என்பது.

விசுவாசித்துக் கீழ்ப்படிந்து நன்மையைப் பெற்றுக்கொண்ட இவன், அத்தோடு என் கடமை தீர்ந்ததென்று நினைக்காமல், தனக்கு சுகம் கொடுத்த இயேசுவைக் குறித்துப் பேசினான். ஆம், உன் கண்கள் எப்படித் திறக்கப்பட்டது என்று கேட்கப்பட்டபோது, அவன் பிரதியுத்தரமாக **இயேசு என்னப்பட்ட ஒருவர்** சேறுண்டாக்கி, என் கண்களின் மேல் பூசி, நீ போய் சீலோவாம் குளத்திலே கழுவு என்றார். அப்படியே நான் போய்க் கழுவி, பார்வையடைந்தேன் என்றான். இங்கே, அவன், **இயேசு என்னப்பட்ட ஒருவர்** என்று சொல்லுவதைக் கவனித்தால், இயேசுவைப் பற்றி இவனுக்கு பெரிதாக ஒன்றும் தெரிந்ததாகத் தெரியவில்லை பர்திமேயு என்ற குருடன் "இயேசுவே, தாவீதின் குமாரனே" (மாற் 10:47) என்றான். இவனோ, இயேசு என்னப்பட்ட ஒருவர் என்று கூறுகிறான். ஆக, இவனுக்கு இயேசுவைப் பற்றி அதிகம் தெரியவில்லை. ஆனாலும், நான் அவரிடத்தில் நன்மை பெற்றிருக்கிறேன். ஆகவே அவரைப் பற்றி பேசுவேன் என்று பேசியுள்ளான்.

அப்படியானால், நாமெல்லாம் என்ன செய்து கொண்டிருக்கிறோம்? ஒருவேளை அவருடைய வார்த்தைகளடங்கிய புதிய ஏற்பாட்டு உபதேசத்தை ஏற்று கீழ்ப்படிந்து, பாவங்கள் கழுவப்பட்டு இரட்சிப்

படைந்தவர்களாக இருந்தாலும் சரி, அல்லது புதிய ஏற்பாட்டு உபதேசத்திற்குக் கீழ்ப்படியாமல் வெறுமனே அவரை அறிந்தவர்களாக இருந்தாலும் சரி, என்ன செய்து கொண்டுள்ளோம்? அவரைப் பற்றிப் பேசுகிறோமா? நாம் இரட்சிப்படைந்ததை மற்றவர்களோடு பகிர்ந்து கொள்கிறோமா? எண்ணிப் பார்ப்போம். அவன் இயேசுவை அதிகம் அறியாமலே அவரைப் பற்றிப் பேசியுள்ளான். ஆனால், நாமெல்லாம் இயேசுவைப் பற்றிப் பேசவேண்டுமானால், அப்படிப் பேசுவதற்கு, ஏராளமான காரியங்கள் நமக்கு வெளிப்படுத்தப்பட்டுள்ளது. போதிக்கப் பட்டுள்ளது. ஆனாலும், நாம் வாய்மூடி மௌனிகளாக இருக்கிறோமே ஏன்?

அவரைப் பற்றி பேசுவதற்கென்று சிலர் இருக்கிறார்கள். அவர்கள்தான் அதற்காகப் பயிற்சி எடுத்திருக்கிறார்கள். அவர்களுக்குத் தான் அதற்காக சம்பளம் கிடைக்கிறது. அவர்களுக்கு தான் அதை விட்டால் வேறு வேலையில்லையென்றெல்லாம் நினைக்கிறோம். அப்படித்தானே? ஆனால், இந்தப் பிறவிக் குருடன், ஏதாவது இயேசுவைப் பற்றி பேச பயிற்சி எடுத்தானா? அப்படிப் பேசுவதற்கு அவனுக்கு கூலி ஏதாவது கிடைத்ததா? சொல்லுங்கள். ஒன்றுமில்லை தானே. ஆனாலும், அவன் பேசினான் தானே! அப் 8:4-ல், என்று பார்க்கிறோம். இவர்களெல்லாம் அப்போஸ்தலர்கள் போல பிரத்தியேகமாகப் பயிற்சி பெற்றவர்களுமல்ல, அதற்காகக் கூலி பெற்றவர்களுமல்ல ஆனாலும் பேசினார்கள்.

அருமையானவர்களே, இயேசுவைப் பற்றி அறிந்து வைத்திருக்கிற நாம், அவர் மூலம் ஆத்தும சுகம் பெற்ற நாம் அவரைக் குறித்துப் பேச வேண்டும். இந்தப் பிறவிக் குருடன் அதைத்தான் நமக்குச் சொல்லுகிறான். பேசுவோமா?

## III பிறவிக்குருடன் தன் நிலையில் உறுதியாக இருந்தான் (9:16-34)

பிறவிக் குருடன் சுகமாக்கப்பட்ட சம்பவத்திலிருந்து நமக்குக் கிடைக்கும் இன்னுமொரு பாடம், அவன் தன்னுடைய நிலையிலே உறுதியாக இருந்தான் என்பது

அவன், இயேசுவின் வார்த்தைகளை விசுவாசித்துக் கீழ்ப்படிந்து அதன்மூலம் நன்மை பெற்று, அவருக்காகப் பேசினபோது, எதிர்வந்த எதிர்ப்புகள் சாதாரணமானதல்ல, அதிகாரத்தைத் தன் கையிலே வைத்திருந்த அந்த சதிகாரக் கும்பல், அவனை மிரட்டிப் பணிய வைக்கப் பார்த்தது, ஒன்றும் முடியவில்லை. ஆர்ப்பரித்து அவனுக்கு எதிராகக் கிளம்பி வந்தவர்கள், அப்படியே, அடங்கி, அவனுடைய உறுதிக்கு முன்பாக மண்டியிட வேண்டியிருந்தது. ஆம், ஆறுமுறை அவனை கேள்விக்

கணைகளால் துளைத்தெடுத்தனர். அத்தோடு, அவனை அவமானப்படுத்தி, துன்பப்படுத்தி தண்டித்தனர் (9:28,34) ஆனால், அவன் தன் விசுவாசத்தை கொஞ்சமும் விட்டுக் கொடுக்கவுமில்லை, தன்னை சுகப்படுத்தியவரை விட்டு ஓடவுமில்லை. மாறாக, எதிர்த்தவர்களும் அவருக்கு சீஷரானால் நன்றாயிருக்குமே என எண்ணி, அவருக்கு சீஷராக உங்களுக்கும் மனதுண்டோ? (9:27) என்று எதிர்க்கேள்வி எழுப்பி அவர்களை அசர வைத்தான்.

இதை வாசிக்கும் அன்பான வாசகரே! தேவனுடைய காரியத்தில் விசுவாச விஷயத்தில், இரட்சிப்பின் வாழ்க்கையில் நம்முடைய உறுதி எந்தளவு உள்ளது? நம்முடைய கிறிஸ்தவ ஜீவியத்தில் சோர்வுகளும், சோதனைகளும் வரும்போது அவைகளை நாம் எப்படி எதிர் கொள்கிறோம்? பேதுருவும், மற்ற, அப்போஸ்தலரும், ஆலோசனைச் சங்கத்துக்கு முன்பாக நிறுத்தப்பட்டு மிரட்டப்பட்டபோது, அவர்கள் சொன்னதை கவனியுங்கள், **“அதற்கு பேதுருவும் மற்ற அப்போஸ்தலரும் மனுஷருக்குக் கீழ்ப்படிகிறதைப் பார்க்கிலும் தேவனுக்குக் கீழ்ப்படிகிறதே அவசியமாயிருக்கிறது”** என்றார்கள் (அப். 5:29) இயேசுவின் காரியமாக **அவர் உயிர்த்தெழுந்த பின்** அப்போஸ்தலர்கள் காட்டின மன உறுதி, **அவருடைய ஊழிய நாட்களிலேயே** இவனுக்குள்ளாக இருந்திருக்கிறது.

இந்தப் பிறவிக் குருடனிடமிருந்த உறுதி தான், அவரைப் பின்பற்றுகிற ஒவ்வொருவரிடத்திலும் இருக்க வேண்டுமென்று தேவன் எதிர்பார்க்கிறார். தங்களுடைய விசுவாசத்திலே தள்ளாடிக் கொண்டிருந்த கொரிந்தியருக்கு தேவன் சொல்லும்போது, “... கர்த்தருக்குள் நீங்கள் படுகிற பிரயாசம் விருதாவாயிராதென்று அறிந்து, நீங்கள் உறுதிப்பட்டவர்களாயும், அசையாதவர்களாயும் கர்த்தருடைய கிரியையிலே எப்பொழுதும் பெருகுகிறவர்களாயும் இருப்பீர்களாக” என்கிறார். (Iகொரி 15:58) இன்னும், யாக்கோபு ஆசிரியரைக் கொண்டு தேவன் சொல்லும்போது, “சோதனையைச் சகிக்கிற மனுஷன் பாக்கியவான்; அவன் உத்தமனென்று விளங்கின பின்பு கர்த்தர் தம்மிடத்தில் அன்பு கூறுகிறவர்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணிண ஜீவ கிரீடத்தைப் பெறுவான்” என்று கூறுகிறார். (யாக் 1:12)

ஆகையால், நாம் சோதனைகளைச் சகித்து, விசுவாசத்தில் உறுதி காட்டுவோம், இறுதிவரை உறுதி காட்டுவோம். நம்முடைய இரட்சகர் “முடிவு பரியந்தம் நிலைத்திருப்பவனே இரட்சிக்கப்படுவான்” என்று கூறியுள்ளார் (மத். 10:22) ஆகவே, இவ்விஷயத்திலும் நாம் இந்தப் பிறவிக் குருடனின் மாதிரியைப் பின்பற்றுவோம்.

தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக! ஆமென் !

# இன்றைக்கு ஏன்

## ஒரே ஞானஸ்நானம் இருக்கிறது?

**உ**ங்களுக்குத் தெரியுமோ, தெரியாதோ எனக்குத் தெரியவில்லை, ஆனால், கிறிஸ்துவை பின்பற்றுகிறோம் என்று சொல்லுகிற அநேகர், பல ஞானஸ்நானம் உண்டு என்று போதிக்கிறார்கள். தண்ணீரில் முழ்கி எடுக்கும் ஞானஸ்நானம், ஒருவரின் தலையில் தண்ணீரை ஊற்றும் ஞானஸ்நானம், ஆவியின் ஞானஸ்நானம் என பட்டியல் நீண்டுகொண்டே போகிறது. இந்த காரியத்தைக் குறித்து போதிக்கிறவர்கள், ஞானஸ்நானத்திற்கு அநேக நோக்கங்களை கூறுகிறார்கள். அதில், அநேகர் சொல்லும் காரணம், அது இரட்சிப்பின் அடையாளம் என்பதாகும். மற்றவர்கள் அது பாவமன்னிப்புக் கென்று, மற்றும் ஒருவரை கிறிஸ்துவுக்குள்ளாகவும் அவருடைய சபைக்குள்ளாக்கவும் தேவைப்படுகிறது என்கிறார்கள்.

ஆனால், பரிசுத்த வேதாகமம் ஒரே ஞானஸ்நானம் உண்டு என்று போதிக்கிறது. பவுல் சொல்லுகிறார், "உங்களுக்கு உண்டான அழைப்பினாலே நீங்கள் ஒரே நம்பிக்கைக்கு அழைக்கப்பட்டது போல, ஒரே சரீரமும், ஒரே ஆவியும் உண்டு; ஒரே கர்த்தரும், ஒரே விசுவாசமும், ஒரே ஞானஸ்நானமும், எல்லாருக்கும் ஒரே தேவனும் பிதாவும் உண்டு; அவர் எல்லோர் மேலும், எல்லாரோடும், உங்கள் எல்லாருக்குள்ளும் இருக்கிறவர்" (எபே. 4:4-6) ஒரே தேவன், ஒரே ஆண்டவர் அல்லது கிறிஸ்து, ஒரே ஆவி அல்லது பரிசுத்த ஆவி, ஒரே விசுவாசம் ஒரே ஞானஸ்நானம், ஒரே சரீரம், ஒரே நம்பிக்கை இவைகள் உண்டு என்று தேவனால் ஏவப்பட்ட மனிதன் சொல்வதை தயவு செய்து கவனியுங்கள். இவைகளைச் சொல்லும்போது ஒரே ஞானஸ்நானம் உண்டு என்கிறார். ஒரே தேவனும், ஒரே கிறிஸ்துவும் என்பது உண்மையானால் ஒரே ஞானஸ்நானம் என்றால், அதன் பொருளும் ஒரே ஞானஸ்நானம் என்பதுதான்.

ஆனால், இந்த ஞானஸ்நானம் எதுவாக இருக்க முடியும்? இன்றைக்கு மனிதர்கள் சொல்லும் ஞானஸ்நானம் ஒருபுறமிருந்தாலும், வேதத்திலேயே நாம் அநேக ஞானஸ்நானத்தைப் பற்றி வாசிக்கிறோம். உதாரணமாக, லூக்கா 7:29 ம் வசனத்தில், ஜனங்கள் யோவானின் ஞானஸ்நானத்தைப் பெற்றுக்கொள்ளுவதை நாம் கவனிக்க வேண்டும். தன்னை பரீட்சித்துப் பார்க்க வந்த சிலரிடம் கிறிஸ்துவானவர்

கேட்கும்போது, "யோவான் கொடுத்த ஸ்நானம் தேவனால் உண்டாயிற்றோ, மனுஷரால் உண்டாயிற்றோ, எனக்கு உத்தரவு சொல்லுங்கள் என்றார்" (11:30) கிறிஸ்து, யோவானால் ஞானஸ்நானம் பெற்றார் (மத். 3:13-17) கிறிஸ்துவானவர் எல்லா நீதியையும் நிறைவேற்ற ஞானஸ்நானம் எடுத்தாலும், பொதுவாக ஜனங்கள் வரவிருந்த ஆண்டவரின் ராஜ்யத்திற்கு அல்லது சபைக்கு ஆயத்தமாக ஞானஸ்நானம் பெற்றார்கள். ஆகவே தான், அது மனந்திரும்புதலின் ஞானஸ்நானம் என்று அழைக்கப்படுகிறது (லூக்கா 3:3) எபேசுவிலே சிலரை பவுல் கண்டு அவர்கள் யோவானின் ஸ்நானத்தை பெற்றிருந்து பரிசுத்த ஆவியை பற்றிக் கேள்விப்படாமலிருந்தார்கள். ஆகவே, அவர்களிடம் யோவானின் ஞானஸ்நானத்தின் நோக்கத்தைப் பற்றி கூறிய அவர், "அப்பொல்லோ என்பவன் கொரிந்து பட்டணத்திலே இருக்கையில், பவுல் மேடான தேசங்கள் வழியாய்ப் போய், எபேசுவுக்கு வந்தான்; அங்கே சில சீஷரைக் கண்டு: நீங்கள் விசுவாசிகளானபோது, பரிசுத்த ஆவியைப் பெற்றீர்களா என்று கேட்டான் அதற்கு அவர்கள்: பரிசுத்த ஆவி உண்டென்பதை நாங்கள் கேள்விப்படவே இல்லை என்றார்கள். அப்பொழுது அவன்: அப்படியானால் நீங்கள் எந்த ஞானஸ்நானம் பெற்றீர்கள் என்றான். அதற்கு அவர்கள் யோவான் கொடுத்த ஞானஸ்நானம் பெற்றோம் என்றார்கள். அப்பொழுது பவுல்: யோவான் தனக்குப்பின் வருகிறவராகிய கிறிஸ்து இயேசுவில் விசுவாசிகளாயிருக்க வேண்டும் என்று ஜனங்களுக்குச் சொல்லி, மனந்திரும்புதலுக்கு ஏற்ற ஞானஸ்நானத்தைக் கொடுத்தானே என்றான். அதைக்கேட்டபோது அவர்கள் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றார்கள். (அப். 19:1-5). யோவானின் ஞானஸ்நானம் என்றென்றைக்கும் உரியது அல்ல. அது ஒரு நோக்கத்திற்காக கொடுக்கப் பட்டது. அது நிறைவேறிய உடன் அது நிறுத்தப்பட்டது.

மத்தேயு 3:11,12 யோவான் ஸ்நானகன் இயேசுக்கிறிஸ்து கொடுக்கப்போகும் இரண்டு ஞானஸ்நானத்தைக் குறித்துப் பேசுகிறார், "மனந்திரும்புதலுக்கென்று நான் ஜலத்தினால் உங்களுக்கு ஞானஸ்நானங் கொடுக்கிறேன்; எனக்குப்பின் வருகிறவரோ என்னிலும் வல்லவரா யிருக்கிறார், அவருடைய பாதரட்சைகளைச் சுமக்கிறதற்கு நான் பாத்திரன் அல்ல. அவர் பரிசுத்த ஆவியினாலும் அக்கினியினாலும் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பார். தூற்றுக்கூடை அவர் கையில் இருக்கிறது; அவர் தமது களத்தை நன்றாய் விளக்கி, தமது கோதுமையைக் களஞ்சியத்தில் சேர்ப்பார்; பதரையோ அவியாத அக்கினியினால் சுட்டெரிப்பார் என்றான். கதிர்களை அறுக்கிறவர்கள் என்ன செய்வார்களோ

அதை கிறிஸ்து ஜனங்களுக்கு செய்வார் என்ற ஒரு காட்சியை யோவான் இங்கு நமக்கு காட்டுகிறார். அந்த நாட்களில் கோதுமை அறுவடையை ஜனங்கள் நன்றாக அறிந்திருந்தார்கள். கோதுமையையும், பதரையும் காற்றின் துணையுடனோ அல்லது தூற்றுக்கூடைகள் துணையுடனோ பிரிப்பார்கள் கோதுமையோ உணவுக்காக பாதுகாக்கப்படும், ஒன்றுக்கும் உதவாத பதரோ அக்கினியில் சுட்டெரிக்கப்படும். இதைப்போலவே, கிறிஸ்து, பரிசுத்த ஆவியோடும், அக்கினியோடும் ஞானஸ்நானம் கொடுப்பார் என யோவான் கூறுகிறார். அதன் பின்பு, பரிசுத்த ஆவியை அல்லது தேற்றரவாளனை அனுப்புவேன் என்று அப்போஸ்தலருக்கு வாக்குக் கொடுத்தார் (யோவான் 15:26; 16:7,13) அப். 1:8-ல் மீண்டும் பரிசுத்த ஆவியை நான் உங்களுக்கு அனுப்புகிறேன் என்றார். லூக்கா 24:49-ல் "என் பிதா வாக்குத்தத்தம் பண்ணினதை, இதோ, நான் உங்களுக்கு அனுப்புகிறேன். நீங்களோ உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும் வரைக்கும் எருசலேம் நகரத்தில் இருங்கள் என்றார்" என்று வாசிக்கிறோம்.

அப்போஸ்தலர் 2ம் அதிகாரத்தில், பரிசுத்த ஆவியானவர் அப்போஸ்தலர்கள் மேல் வந்து, கிறிஸ்து அவர்களுக்கு சொன்ன எல்லாவற்றையும் நினைத்துப்பார்க்கவும் இதுவரைக்கும் கற்றறிந்திராத மொழிகளில் பேசவும், அற்புதங்களை செய்யவும் பெலன் கொடுத்தார். அவர்களைக் கொண்டு எல்லாரும் ஆசீர்வதிக்கப்பட்டார்கள். ஆனால் யோவான் ஸ்நானகனோ இயேசு அக்கினியாலும் ஞானஸ்நானம் தருவார் என்றார். அதற்கு என்ன பொருள்? களஞ்சியத்தில் சேர்க்கப்பட்ட கோதுமை, நீதிமான்களை குறிக்குமானால், சுட்டெரிக்கும் பதரை நாம் துன்மார்க்கர்களுக்கு ஒப்பிடலாம். கிறிஸ்து அப்போஸ்தலர்களை பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் கொடுப்பார், ஆனால் துன்மார்க்கர்களுக்கோ அவர் அக்கினியால் ஞானஸ்நானம் கொடுப்பார். ஞானஸ்நானம் என்பது முழுக்கு என்று நாம் புரிந்து கொண்டால், அப்போஸ்தலர்கள் பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானப்படுத்தப்பட்டார்கள், அப்படியானால், கிறிஸ்து, அக்கினியால் ஞானஸ்நானம் கொடுப்பார் என்றால், துன்மார்க்கர் அக்கினியால் முழுக்கடிக்கப்படுவார்கள் அது எப்பொழுது?

தொடரும்!

**J.C. சோட்** **J.C. Choate**

## ஜெபிப்போம்

**எதிர்வரும் அக்டோபர் 22,23 ஆகிய தேதிகளில் நடைபெற இருக்கும் ஏழாவது வேதாகம கருத்தரங்கம் சிறப்புடன் நடைபெற ஜெபிப்போம்.**

ஜெபியுங்கள் ! திட்டமிடுங்கள் ! பங்கு பெறுங்கள் !

# காங்கயம் கிறிஸ்துவின் சபையாரும்
# ஏக்லீசியா வேதாகமக் கல்லூரியும்

## இணைந்து நடத்தும்

## ஏழாம் வேதாகம கருத்தரங்கம்
## (Seventh Annual Bible Lectureship)

நாள் : **அக்டோபர் 22,23 - 2004 (வெள்ளி, சனி)**
[அரசு விடுமுறை நாட்கள்]

நேரம் : **காலை 9.00 - 12.30 மணி வரை**
**மாலை 2.00 - 5.00 மணி வரை**

இடம் : **கிறிஸ்துவின் சபை வளாகம்**
தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701.

ஆண்களும், பெண்களும் தனித்தனியே தங்குவதற்கு
சௌகரியமான இடவசதி தேவையானது உண்டு.

குறிப்பு : சனிக்கிழமை மதியத்துடன் கருத்தரங்கம் நிறைவுபெறும்.


தொடர்பு முகவரி :

**கிறிஸ்துவின் சபை**
தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701.
போன் : 04257 - 230603, 230030
98427 - 30382

பெண்கள் பகுதி

# நம்முடைய பிள்ளைகளை நாம் ஏன் இழந்து கொண்டுள்ளோம் ?

நம்முடைய இம்மாத தலைப்பு எல்லா குடும்பங்களுக்கும், சபைக்கும் பொருந்தி வருகிறதாகவே உள்ளது. தேவனுடைய மக்களாகிய நாமும் பிள்ளைகளை இழந்தே வருகின்றோம். வாலிபத்தை எட்டும் வயதிலேயே ஏறக்குறைய 70% பிள்ளைகள் இவ்வாறு இழக்கப்பட்டுப் போகின்றனர். மிகவும் விலையேறப்பெற்ற சொத்துக்களாகிய நம்முடைய பிள்ளைகள் வளர்ந்து, வீட்டையும், தேவனையும் விட்டு விலகிச் செல்வது ஏன் ? எப்படி இது முடிகிறது? அவர்களில் நாம் அன்பு கூறவில்லையா? மிகச் சிறந்தவைகளை நாம் அவர்களுக்கு கொடுத்துக் கொண்டிருக்கிறோ மல்லவா? ஆவிக்குரிய வழிகளை அவர்களுக்கு காட்டாமலாயிருந்தோம்? அவர்களுடைய ஆத்துமாக்களில் அக்கறை செலுத்தவில்லையா? அவர்கள் பரலோகம் செல்வதை நாம் பார்க்க விரும்பவில்லையா?

நாம் இவைகளையெல்லாம் செய்து கொண்டுதான் இருக்கிறோம் என நினைத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் இந்த வாழ்விலும், வரப்போகிற வாழ்விலும் அவர்கள் இழந்து போகவே நாம் அனுமதித்துக் கொண்டிருக்கிறோம். இருதயமே சுக்கு நூறாக உடைந்து போகும் அளவு வேதனை தரும் விஷயமாகவல்லவா இது இருக்கிறது! நம் பிள்ளைகள் மாத்திரம் தங்களை தேவனுக்கு ஒப்புக் கொடுத்து வாழ்வார்களானால், அது பெற்றோர்களாகிய நமக்கும் சமாதானமாக இருக்கும். அவர்கள் குடும்பத்துக்கும், இந்த உலகத்திற்கும், அவர்கள் சார்ந்துள்ள சபைக்கும் ஆசீர்வாதத்தை கொண்டுவரக்கூடியதாக இருக்கும்.

நமக்கிருக்கும் சொத்தே நம்முடைய பிள்ளைகள்தான். நமக்கு சந்தோஷத்தையும், மகிழ்ச்சியையும் கொண்டுவரக்கூடியவர்களே நம் மக்கள் தான். ஆனால், பல குடும்பங்களின் நிலை எவ்வாறு உள்ளது? **"இன்றைக்கு நம்மோடு இருக்கும் பிள்ளைகள் நாளை எங்கோ சென்று விடுகின்றனர்."** நம்முடைய வேலை, ஓயாத அலுவல் இவைகள் நிமித்தம் வருடங்களை உருண்டோடச் செய்து விடுகிறோம். நம்முடைய பிள்ளைகளுக்கான சிறந்த திட்டத்தை தீட்டுகிறோம். மிகச் சிறந்ததை கொடுக்க விரும்புகிறோம். ஆனால் நாமே **உலக பொருளுக்கு** அதிக முக்கியத்துவம் கொடுத்து, நமது அன்றாட வாழ்வில் ஆவிக்குரிய காரியங்களுக்கு போதுமான அளவு அனுமதி கொடுக்காமல் வாழ்ந்து விடுகிறோம். அதனடிப்படையில் பிள்ளைகளையும் கெடுத்துவிடுகிறோம்.

நம் பிள்ளைகளை நேசிக்கிறோம். உண்மைதான். ஆனால், நம் அன்பை அவர்களிடம் காட்ட நாம் நேரத்தை ஒதுக்குவதில்லை. அவர்களுக்கு வேண்டியதையெல்லாம் வாங்கித் தருகிறோம். ஆனால் நம்முடைய நேரத்தை அவர்களுக்கு கொடுக்கிறோமா? தேவையான அளவு நாம் அவர்களை கண்காணிக்கிறோமா? பயனற்ற, நலமில்லா காட்சிகளை தொலைக்காட்சியில் பார்க்க அனுமதித்துக் கொண்டிருக்கிறோமா?. வருடா வருடம் அவன் பள்ளியில் படிக்கும்போது பரிணாமம், நாஸ்திக நம்பிக்கை இவைகளைப் படிக்க வைத்துவிட்டு, அவனுக்கு வேண்டிய அடிப்படை விசுவாசத்தை சொல்லிக் கொடுக்காமல், தவறான கொள்கைகளை எதிர்க்கும் திறனை வளர்க்காமல் இருக்கிறோமா?

தீய நண்பர்கள், ஆவிக்குரிய வாழ்க்கைக்கு தடையாய் இருக்கும் சமுதாய ஈடுபாடு இவைகளினின்று அவர்களை விலக்க முயற்சிக் கிறோமா? எல்லாவற்றிற்கும் மேலாக நாம் **முன்மாதிரியான வாழ்க்கையை** அவர்கள் முன் வாழ்ந்து காட்டிக் கொண்டிருக்கிறோமா? நாமே பலவீனமான கிறிஸ்தவர்களாக இருந்து கொண்டு நம் பிள்ளைகள் பலமுள்ள விசுவாசிகளாக மாற வேண்டும் என்று எதிர்பார்க்கக்கூடாது. தீமோத்தேயுவுக்கு பவுலடியார் கூறும்போது **ஒருவன் தன் சொந்த ஜனங்களையும், விசேஷமாகத் தன் வீட்டாரையும் விசாரியாமற் போனால், அவன் விசுவாசத்தை மறுதலித்தவனும், அவிசுவாசியிலும் கெட்டவனுமாயிருப்பான்** (Iதீமோ 5:8) என்கிறார். தொடர்ந்து கற்றுக் கொடுப்பது, பயிற்சியளிப்பது, பிள்ளைகளை இணங்க வைத்தல், போன்றவைகளை ஞானத்தோடும், அன்போடும் கற்றுக்கொடுக்க வேண்டும்.

**"பிள்ளையானவன் நடக்க வேண்டிய வழியிலே அவனை நடத்து அவன் முதிர் வயதிலும் அதை விடாதிருப்பான்** (நீதி : 22:6) என்று ஞானி சாலமோனின் வார்த்தைகள் எவ்வளவு உண்மையிலும் உண்மை. பெற்றோரின் அஜாக்கிரதையால்தான் பிள்ளைகள் கெட்டுப்போய் விடுகின்றனர். அநேக பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை அவர்களாகவே வளர்வதற்கு அனுமதித்து விடுகிறார்கள். உலகப் பிரகாரமான பெற்றோர்களுக்கும், கிறிஸ்தவப் பெற்றோர்களுக்கும் கட்டாயம் வேறுபாடு உள்ளது. தன் மகன் வாரத்தின் முதல் நாள் காலையில் ஆராதனையா? கிரிக்கெட் விளையாட்டா? எதை தெரிந்தெடுக்கலாம் என்ற நிலை வரும்போது, ஆராதனை தான் முக்கியம் என்று கண்டித்து புத்தி சொல்லும் பெற்றோர்களாக நாம் இருக்க வேண்டும். நல்ல தகப்பன் தன் பிள்ளைக்கு உந்துதலை ஏற்படுத்தக்கூடியவராக இருக்கிறார். குழந்தைகள் இரட்சிக்கப்படுவது அவசியம். தேவன் இதை எதிர்பார்க்கிறார். ஒருவேளை பிள்ளைகளை கண்டிக்காத, ஏனோ தானோ என்ற நிலையில் உள்ள பெற்றோர் உடனே தங்கள் நிலையில் மாற்றத்தை ஏற்படுத்திக் கொள்ள

வேண்டும். **"எந்த சிட்சையும், தற்காலத்தில் சந்தோஷமாய் காணாமல் துக்கமாய்க் காணும்; ஆகிலும் பிற்காலத்தில் அதில் பழகினவர்களுக்கு அது நீதியாகிய சாமாதான பலனைத் தரும்"** (எபி: 12:11) என்று எபிரேயர் ஆசிரியர் கூறுகிறபடி, சிறுவயதில் கண்டித்து, கண்டனம் பண்ணி புத்தி சொல்லி வளர்ப்பதால் நம் பிள்ளைகளை ஒரு நல்ல தகப்பனாகவும், தாயாகவும் விளங்கும்படி உதவி செய்கிறோம்.

பிள்ளைகள், இழந்து போவதற்கு பிரதான காரணம் பெற்றோரே. இவர்களின் சுயநலத்தால், கேட்பாரற்ற சமுதாயமே உருவாகி விடுகிறது. மதுவுக்கு அடிமைகள், வீட்டை விட்டு வெளியேறுதல், குற்றவாளிகள் உருவாதல் போன்றவைகளோடு நின்றுவிடாமல் சிறை தண்டனை, மரண தண்டனை இவை யாவும் பெற்றோரால் கைவிடப்பட்ட குழந்தைகளுக்கு ஏற்படுகிறது. இந்நிலையையும் பெற்றோர் நினைத்தால் மாற்றமுடியும். பொறுமையோடும், அன்போடும், ஒவ்வொரு நாளும், வேதத்தை எடுத்து, அவர்களோடு சேர்ந்து வாசித்து, விளக்கிச் சொல்லி, ஜெபிக்கச் சொல்லி, வேத வசனங்களின் முக்கியத்துவத்தையும் அவர்களுடைய படிப்பு, வேலை, பொறுப்புகள், இவைகளோடு சரீர தேவைகளையும் பெற்றோர் பிள்ளைகளுக்குச் செய்யவேண்டும். தகுதியான உடைகளை உடுத்துகிறார்களா? பெரியவர்களுக்கும், அதிகாரத்தில் உள்ளவர்களுக்கும் மதிப்பு கொடுக்கிறார்களா? என கவனிக்க வேண்டும்.

ஆவிக்குரிய ரீதியில் பிள்ளைகள் வளர்க்கப்பட சரியான ஒரு வழி **சபையில் நம் பிள்ளைகளின் பங்கு.** வேதபாட வகுப்புகள், வேத விளக்க வகுப்புகள், ஆராதனை, வாலிபர் முகாம், வேதாகம முகாம்கள், வேதாகம கருத்தரங்குகள், சுவிசேஷ கூட்டங்கள் இவை யாவற்றிலும் தவறாமல் பங்கு கொள்ளச் செய்ய வேண்டும். நம் பிள்ளைகளை ஊழியம் செய்ய அனுப்ப வேண்டும். அல்லது ஊழியத்தைத் தாங்கச் செய்ய வேண்டும்.

இவ்வாறு பெற்றோரும் சபையாரும் சேர்ந்து எப்படியாவது, எந்த வழியிலாவது நம் பிள்ளைகளை இழந்து போகாமல் காப்பாற்ற வேண்டும்.

பவுல் கூறுகிற ஆலோசனையைப் பார்ப்போம். **"பிள்ளைகளே, உங்கள் பெற்றோருக்குக் கர்த்தருக்குள் கீழ்ப்படியுங்கள். இது நியாயம் உனக்கு நன்மை உண்டாயிருப்பதற்கும், பூமியிலே உன் வாழ்நாள் நீடித்திருப்பதற்கும், உன் தகப்பனையும் உன் தாயையும் கனம் பண்ணுவாயாக என்பதே வாக்குத்தத்தமுள்ள முதலாங் கற்பனையாயிருக்கிறது.**

**பிதாக்களே, நீங்களும் உங்கள் பிள்ளைகளைக் கோபப் படுத்தாமல் கர்த்தருக்கேற்ற சிட்சையிலும் போதனையிலும் அவர்களை வளர்ப்பீர்களாக" (எபேபி: 6:1-4).**

கிறிஸ்துவுக்குள் பிரியமான தாய்மார்களே! வேத வசனம் சொல்லும் ஆலோசனைப்படி செய்தால் கீழ்ப்படிதலான, ஆசீர்வாதமான பிள்ளைகளை உருவாக்க முடியும். வளர்க்க வேண்டிய வயதில் வளர விட்டு விட்டு, கடைசியில் கண்ணீர் விட்டுக் கொண்டிருக்கும் நிலையை தவிர்ப்போம். கர்த்தர், ஈவாக நமக்கு கொடுத்த பிள்ளைகளை ஆவிக்குரிய நிலையில் இழந்து போகாமல், அவர்கள் ஆத்துமாவுக்கு உத்திரவாதமாக நாம் இருப்பதால், நம் பொறுப்பை உண்மையோடு செய்வோம்! நம் பிள்ளைகளை காப்போம் !!.

ரேச்சல் இராஜநாயகம்


பெட்டி பர்ட்டன் சோட்

**உங்கள் கவனத்திற்கு**

அதிகத் தரமுள்ள பல வண்ணத் தாள்களைக் கொண்டு நேர்த்தியான அளவுகளில் வடிவமைக்கப்பட்டு. சிறப்பான முறையில் அச்சிடப்பட்டு. எடுப்பான தோற்றம் கொண்ட சுவிசேஷக் கைப்பிரதிகள் உங்கள் உபயோகத்திற்கு ஆயத்தமாக உள்ளது. **மிகக் குறைந்த விலை** தேவைக்கு முந்துங்கள்.

**தலைப்புகள்**

1. உன்னை நீயே எண்ணிப்பார்
2. கண் இல்லாதவன் கண்டு கொண்டான்
3. மனுக்குலத்துக்கு விமோசனம் உண்டா?
4. இன்றைக்கு நீங்கள் மரிக்க நேர்ந்தால் .....
5. ஞானஸ்நானம்
6. யார் கிறிஸ்தவன்?
7. ஆராதனை
8. சபை என்பது என்ன?

**தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி**

**தமிழ் உலக ஆத்தும ஆதாயத் திட்டம்**

தபால் பெட்டி எண் -27, காங்கேயம் - 638 701.


## வேதத்தை வாசிக்க

- வேதாகமத்தை வாசித்து முடிக்க சுமார் 70 மணி 40 நிமிடங்கள் ஆகும்.
- பழைய ஏற்பாட்டை வாசிக்க 52 மணி 20 நிமிடங்கள் பிடிக்கும்.
- புதிய ஏற்பாட்டை வாசிக்க 18 மணி 20 நிமிடங்கள் ஆகும்.
- பழைய ஏற்பாட்டின் மிக பெரிய புத்தகமாகிய சங்கீதத்தை வாசிக்க சுமார் 4 மணி 28 நிமிடங்கள் ஆகும்.
- புதிய ஏற்பாட்டில் மிக நீளமான புத்தகமாகிய லூக்கா எழுதின நற்செய்தி நூலை வாசிக்க 2 மணி 43 நிமிடங்கள் ஆகும்.

வாலிபர் பகுதி

## வாலிபர்களே ...... கவனியுங்கள்

**வா**லிப நெஞ்சங்களுக்கு, இன்பர் இயேசுவின் நாமத்தில் இனிய வாழ்த்துக்கள். வாலிபர்களே! பொல்லாங்கனை ஜெயிப்பதற்கு நீங்கள் பலவான்களாயிருக்கிறீர்கள், அநேகராகிய நீங்கள் போராடிக் கொண்டிருக்கிறீர்கள். பிசாசை எதிர்த்து நின்று, பட்டயத்தை உருவி நின்று, வெற்றிவாகை சூடிக்கொண்டிருக்கிறீர்கள். நீங்கள் சத்தியத்திற்குத் தூணும் ஆதாரமுமானவர்கள் தேவனுடைய தோட்டத்திலே இயேசு என்ற திராட்சச் செடியிலே படர்ந்த கொடிகளாய் வாடாமல் கனிகொடுத்து தேவனை மகிமைப்படுத்தி தேவனுக்காக எழும்பிப் பிரகாசிக்கும் உங்களுக்கு தேனிலும் மதுரமான தேவனுடைய வார்த்தையிலிருந்து இன்பமான ஆலோசனைகளை இயேசுவின் நாமத்தில் சொல்வதில் பெருமைப்படுகிறேன்.

### தேவசித்தமும், கீழ்ப்படிதலும் :-

அன்பு சகோதரர்களே, இன்று எத்தனையோ வாலிபர்கள் தங்கள் மனம் போனபோக்கிலே போய்க்கொண்டிருக்கிறார்கள். தாயை மதியாமலும், தந்தை சொல் கேளாமலும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இப்படித்தான் மத் 21:28-31 வரை உள்ள வசனப்பகுதியில் தகப்பன் சொல் கேளாத மகனைக் குறித்தும், தகப்பனுடைய சித்தத்தை நிறைவேற்றாத மகனைக் குறித்தும் ஆண்டவராகிய இயேசு சொல்வதைப்பார்க்கிறோம். இரண்டு மகன்களைக் குறித்து சொல்கிறார். மூத்த மகனிடத்தில் இன்றைக்கு என் திராட்சத் தோட்டத்தில் வேலை செய் என்றார். அவனோ மாட்டேன் என்றான். பின்பு மனஸ்தாபப்பட்டு போய் வேலை செய்தான். இளையவனிடத்திலும் அவன் வந்து அப்படியே சொன்னான். அவனோ போகிறேன் ஐயா என்று சொல்லியும் போகவில்லை. இவ்விரண்டு பேரில் தன் தகப்பனுடைய சித்தத்தை நிறைவேற்றினவன் மூத்த மகனாக இருப்பதைப் பார்க்கிறோம். எப்படியாகிலும் தகப்பனுடைய சித்தத்தை நிறைவேற்ற வேண்டுமென்ற எண்ணம் நம் ஒவ்வொருவருக்கும் இருக்கவேண்டும். அப்படி உள்ளவனே ஆசீர்வதிக்கப்படுவான். சாக்கு போக்கு சொல்கிறவனையும், தேவசித்தத்தை நிறைவேற்றாதவனையும் நிச்சயம் தேவன் தண்டிப்பார் (மத் 24:51) தேவனுக்கு பயப்படாமல் தாய் தகப்பனுக்குக் கீழ்ப்படியாமல் மனம் போன போக்கிலே சென்றால் அக்கிரமங்களும், பாவங்களும் நமது வாழ்க்கையில் வந்து சேர்ந்துவிடும். (சங் 14:1,2). தேவனுக்குக் கீழ்ப்படியாமல் வாழும் வாழ்க்கை சுயபுத்தியின்

மேல் நம்பிக்கையாயிருக்கச் செய்யும். (நீதி 3:5) நமது இருதயத்திற்கு காவலிருக்காது (நீதி 4:23) உன்னையே ஞானியாக நினைக்கத் தோன்றும், உன் கண்ணுக்குப்பட்டதெல்லாம் செம்மையானதாக இருக்கும். மனுஷருக்கு செம்மையாய் தோன்றுகிற வழி உண்டு. அதின் முடிவோ மரண வழிகள் (நீதி 14:12). தீமையை உன்னை விட்டு விரட்ட முடியாமல் தவிப்பாய் (நீதி 3:7) காமவிகாரத்தில் மோகம் கொள்ளுவாய். மரணத்தையே நோக்கி உன் பயணமிருக்கும். கண்களின் இச்சை, மாம்சத்தின் இச்சை, ஜீவனத்தின் பெருமை ஆகிய அனைத்தும் உன்னை சூழ்ந்து கொள்ளும். (Iயோவா 2:16,17) வாலிபர்களாகிய நீங்கள் உலகத்தில் அன்பு கூறாமல் தேவனிடத்தில் அன்பு கூர்ந்து விசுவாசத்தில் வளர வேண்டும். இன்று அநேக சகோதரர்கள் வேதத்தை கவனிப்பதில்லை. சபைக்கு ஒழுங்காக செல்வதில்லை. அதனால் தான் இன்று அநேக சகோதரர்கள் தாறுமாறாக நடக்கின்றனர்.

வாலிபர்களாகிய நாம் நமது நடைகளை ஒழுங்குபடுத்த சிந்தனைகளை சீர்படுத்த யாரைத்தேடவேண்டும், இதோ வேத வசனத்தில் 119-வது சங்கீதத்தில் ஒன்பதாவது வசனம் சொல்லுவதை கேளுங்கள். வாலிபன் தன் வழியை எதினால் சுத்தம் பண்ணுவான், உமது வசனத்தின்படி தன்னை காத்துக் கொள்கிறதினால் தானே (யோவா 17:17)-ல் இயேசுவும் இவ்விதமாய் குறிப்பிடுகிறார். உம்முடைய சத்தியத்தினாலே அவர்களை பரிசுத்தமாக்கும் உமது வசனமே சத்தியம். தேவனுடைய வார்த்தை நமது வாழ்க்கையை பரிசுத்தமாக்கும், நடைகளை ஒழுங்குபடுத்தும் பாதைகளை செவ்வைப்படுத்தும் (நீதி 6:23).

மனந்திரும்பின மைந்தனின் சம்பவத்தை லூக் 15-ம் அதி பார்க்கிறோம். இளைய குமாரன் தகப்பனுடைய சொல்லைக் கேளாமல் சொத்தில் அவனுக்கு வரும் பங்கை வாங்கிக் கொண்டு தூர தேசத்திற்குச் சென்று ஊதாரியாக திரிந்து உல்லாசமாய் வாழ்ந்து பணமெல்லாம் செலவழித்து ஒன்றுமில்லாதவனாய் தன் தகப்பனிடத்திற்கு திரும்பி வருவதை பார்க்கிறோம். அந்த தூர தேசத்திலே பஞ்சம் தலைவிரித்து ஆடின போது பன்றியின் தவிடு தின்ன ஆசையாய் இருந்தவன் இவனே. இந்த நிலையில் தான் தகப்பனுடைய மேன்மையும், மகிமையும் புரிந்தவனாய் தகப்பனுடைய சித்தம் செய்யாத அவனின் நிலை என்ன என்பதை யோசித்துப் பாருங்கள்.

பிரியமான சகோதரர்களே, இளமையிலே சந்தோஷப்படுங்கள், மகிழ்ந்து களிகூறுங்கள்; ஆனாலும், தேவன் நியாயத்திலே கொண்டு வந்து நிறுத்துவார் என்பதை நினைத்து தேவனுக்குப் பயப்படும் பயத்தோடும், கீழ்ப்படிதலோடும் வாழ எச்சரிக்கையாயிருங்கள் (பிர 11:9-10). ஏனெனில் ஒவ்வொரு கிரியையையும் அந்தரங்கமான ஒவ்வொரு காரியத்தையும் நன்மையானாலும், தீமையானாலும் தேவன் நியாயத்திலே கொண்டு வருவார். (பிர 12:14).

## உண்மையும், ஒழுக்கமும் :-

ஒழுக்கமில்லாத கல்வி, கிரியையில்லாத விசுவாசம் ஆகிய இவ்விரண்டும் ஒரே வகையைச் சேர்ந்தது, ஒழுக்கமும் கல்வியும் பிரிக்க முடியாதது எப்படியோ அப்படியே விசுவாசமும், கிரியையும் பிரிக்க முடியாத ஒன்று. கனியற்ற அந்தகார கிரியைகளை கடிந்து கொண்டு நற்கிரியைகளைச் செய்யவே கிறிஸ்துவுக்குள் நாம் சிருஷ்டிக்கப் பட்டிருக்கிறோம். பாருங்கள், சகோதரர்களே! அன்று கொரிந்து சபையிலே காணப்பட்ட அதே பாவங்கள் அதாவது, அநியாயம், வஞ்சனை, விபசாரம், வேசித்தனம், விக்கிரக ஆராதனை, சுயபுணர்ச்சி, ஆண்புணர்சி, திருட்டு, கொள்ளை, பொருளாசை, வெறி, உதாசினம், வம்பு, பரியாசம், பொறாமை, அசுத்தம், காமவிகாரம் போன்ற இத்தனை பாவங்களும் காணப்பட்டது (Iகொரி 6:9,10), எபே 4:3-5 இவைகள் அத்தனையும் அந்தகார கிரியைகளும், பிசாசுக்குரியவைகளுமாயிருக்கிறது, ஆனால், பிரியமானவர்களே இவைகளனைத்தும் இன்றைய கிறிஸ்தவர்களையும் விட்டுவிடவில்லை என்பது எத்தனை வேதனையானது. அன்பு சகோதரர்களே, இவைகளையெல்லாம் கிள்ளி எறியவே கிறிஸ்துவுக்குள் நாம் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறோம். எனவே கிறிஸ்துவின் நாமத்தை சொல்லுகிறவன் எவனும் அநியாயத்தை விட்டு விலக வேண்டுமென்று ஆவியானவர் கட்டளையிடுகிறார். (IIதீமோ 2:19) நாம் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ளும் படிக்கே உண்டாக்கப் பட்டிருக்கிறோம். (ரோம 6:3; எபே 4:22-24)

பிரியமானவர்களே இன்று கிறிஸ்துவை காண வேண்டுமென்று எத்தனையோ நெஞ்சங்கள் வானத்தை அண்ணாந்து பார்த்துக் கொண்டிருக்கும் வேளையில், நீங்களோ, பிரியமானவர்களே, இயேசுவைக் காணவேண்டுமென்பதைவிட இயேசுவைக் கற்றுக்கொள்ள வேண்டு மென்று விரும்புங்கள் (எபே 4:19,20). கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது (பிலி 2:5)

பிரியமானவர்களே, அந்தகார கிரியைகள் நமக்குள் ஒளிரும்போது, நமக்குள்ளிருக்கும் ஜீவ ஒளியை அது மறைக்கிறதே, உலகத்தில் நாம் சுடர்களைப் போல பிரகாசிக்க வேண்டுமென்று ஆவியானவர் சொல்கிறார் (பிலி. 2:14). ஆகவே, கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஆவியின் கனிகளை கொடுத்து பிதாவாகிய தேவனை மகிமைப்படுத்தி வாழுவோம். தேவன் தாமே நம் அனைவரோடுங்கூட இருந்து ஆசீர்வதிப்பாராக.

ஆமென் !

**K. சேகர்,** திருப்பூர்.

சிறுவர் பகுதி

# தண்ணீர் திராட்சை ரசமாக ....


எனதருமை சிறு தம்பி, தங்கைகளே உங்கள் யாவருக்கும் ஆண்டவரும், மீட்பருமாகிய இயேசுவின் நாமத்தில் வாழ்த்துதல் சொல்கிறேன். நீங்கள் அனைவரும் இயேசுவிற்கு பிரியமாக நடந்து வருவீர்கள் என நான் நம்புகிறேன். மாதந்தோறும் வெளிவரும் கதைகளும் பாடங்களும் உங்களுக்குப் பயனுள்ளதாக இருக்கும் என நம்புகிறேன். இந்த மாதம் இயேசு செய்த அற்புதத்தை ஆராய்ந்து அதிலிருந்து சில பாடங்களை கற்றுக் கொள்ள முயற்சிப்போம். வாருங்கள் !.

நீங்கள் சமீபத்தில் ஏதாவது கல்யாண வீட்டிற்கோ அல்லது கல்யாண விருந்திற்கோ போனீர்களா? அப்படிப் போயிருந்தால் நீங்கள் சிலநேரம் அங்கே இருந்து விருந்து உண்டபின் வந்திருப்பீர்கள். ஆனால், பாருங்களேன், புதிய ஏற்பாட்டு காலத்தில் கல்யாண காரியங்கள் வித்தியாசமாக நடந்துள்ளது.

அப்படி என்ன வித்தியாசம் என்கிறீர்களா? தொடர்ந்து படியுங்கள். கல்யாண வீட்டிலே மிகப்பெரிய விருந்து ஒழுங்கு செய்யப்பட்டிருக்கும் அது ஒரு வாரம் வரை நீடிக்கும். பொதுவாக, நண்பர்கள், உறவினர்கள், பாட்டுப்பாடி மகிழ்விப்பவர்கள் என யாவரும் வந்திருப்பார்கள். இதைவிட முக்கியம் வந்த அனைவருக்கும் போதுமான அளவு விருந்து கொடுக்க வேண்டும்.

அப்படியொரு கல்யாணத்திற்கு நமது ஆண்டவர் இயேசு கிறிஸ்து சென்றார். அங்கே திராட்ச ரசம் தீர்ந்து போயிற்று. இயேசுவின் தாயாகிய மரியாளுக்கு இயேசுவின் உதவி தேவைப்பட்டது. அங்கே இருந்தவர்கள் யாரும் அற்புதத்தை பார்த்ததில்லை. ஆனால் அவளோ அவரை நம்பினாள். எனவே வேலைக்காரரிடம் **“இவர் சொல்வதை எல்லாம் செய்யுங்கள்”** என்று கூறினாள்.

யூதர்களுடைய வீட்டிலே கற்களால் ஆன ஜாடிகள் இருந்தன. அவைகள் தண்ணீர் சேகரிக்க வைத்திருப்பர். அவைகளில் இயேசு தண்ணீர் நிரப்பச் சொன்னார். அந்த வேலைக்காரரும் அப்படியே செய்தார்கள். ஆனால் “அற்புதமாக” அவை திராட்ச ரசமாக மாறின. அதை அவர் தம் கையால் தொட வில்லை. தண்ணீர் அற்புதமாக திராட்ச ரசமாக மாறவேண்டும் என நினைத்தார். அது நடந்தது.




பின்பு வேலைக்காரர், அதை எடுத்து பந்தி விசாரிப்புக்காரரிடத்தில் இயேசு கட்டளை யிட்டபடியே கொடுத் தார்கள். அது எங்கி ருந்து வந்ததென்று பந்தி விசாரிப்புக் காரனுக்கு தெரியா திருந்தது.

அதை ருசித்த போது, "நீரோ நல்ல ரசத்தை இதுவரை வைத்திருந்தீரே" எனக் கூறி வாழ்த்தினான். (யோவான் 2:10) என்ன அற்புதம் பாருங்கள்! தண்ணீரை திராட்ச ரசமாக மாற்றினார். **இது இயேசு செய்த முதலாம் அற்புதம்**

சரி, இதிலிருந்து என்ன பாடம் நமக்கு கிடைக்கிறது? இதிலிருந்து நாம் அற்புதத்தின் அவசியத்தை உணர்கிறோம். இயேசு சொன்ன காரியம் உண்மையென்றும், அவர், தான் தேவனுடைய குமாரன் என்றும் மற்றவர்கள் நம்புவதற்கு அற்புதங்கள் தான் சான்றுகளாக இருந்தன. இப்படிப்பட்ட இயேசுவை ஆண்டவராகக் கொண்டிருப்பது நிச்சயமாக நமக்கு ஓர் ஆசீர்வாதம். எனவே அந்த ஆசீர்வாதத்தை தவறாமல் காத்துக்கொள்வது அவசியம். அதை பத்திரப்படுத்த இச்சிறுவயதிலிருந்தே முயற்சிப்போம்.

தேவன் நம்மை ஆசீர்வதிப்பார் !

**ஏபில். ஆர். ரோஜர் நாயகம்**

# I யோவான் ஒரு கண்ணோட்டம்

**ஆசிரியர் : அப்போஸ்தலன் யோவான்**
**காலம் : சுமார் 90 கி.பி.**

## இந்நூல் பற்றி

1. "அன்பின் நிருபம்" என்று இந்நூல் அழைக்கப்படுகிற போதிலும், பொய்யர்கள் பற்றியும், அந்திக்கிறிஸ்து பற்றியும் அதிகமாய் பேசுகிறது.
2. கிறிஸ்துவின் சுவிசேஷத்தில் ஒரு கிறிஸ்தவனின் விசுவாசத்தை பெலப்படுத்த இந்நூல் எழுதப்பட்டது.
3. இயேசு கிறிஸ்து மாம்சத்தில் வெளிப்பட்டார் என்பதை கள்ள போதகர்கள் மறுத்து போதனை செய்தார்கள் (1:12; 2:22,23, 4:1-3)
4. பின்வரும் காரியங்களை வேறுபடுத்தி இந்நூல் வெளியிடப்பட்டது.

   a) சத்தியம் Vs பிழை　　b) ஒளி Vs இருள்

   c) அன்பு Vs வெறுப்பு　　d) ஜீவன் Vs மரணம்
5. கி.பி. 94-ல் டோமிசியன் கிறிஸ்தவர்களுக்கு விரோதமாக செயல்பட்டு, அவர்களை துன்பப்படுத்தினான், அச்செய்தி பற்றி இந்நூலில் எதுவும் இடம் பெறவில்லை.

## இந்நூலின் செய்தி

1. ஐக்கியம் என்பது சரியான அறிவின் அடிப்படையில் தான் அமையும் (1:3)
2. ஒளியிலே நடந்தால் நாம் தேவனோடு ஐக்கியப்பட்டிருக்கலாம் (1:6,7)
3. இவ்வுலகத்தின் பொருளின் மீது ஒரு கிறிஸ்தவன் நம்பிக்கை வைக்கக் கூடாது (2:15-17)
4. அன்பு எப்பொழுதும் செயல்பாட்டில் வெளிப்படுத்தப்பட வேண்டும் (3:16-18)
5. கள்ள போதகர்களை சோதித்து, குறித்துக் கொண்டு, தவிர்க்க வேண்டும் (4:1-4)
6. விக்கிர ஆராதனை எவ்வடிவிலிருந்தாலும் அது தவறான ஒன்றாகும் (5:21)

# விசுவாசத்தின் அடிப்படைகள்

**க**டந்த மாதம், இந்த இதழின் மூலமாக நாம் கூறினபோது தேவனுடைய பார்வையில் ஆரோக்கியமான உபதேசத்தின் முக்கியத்துவம் பற்றி, படிக்க ஆரம்பித்தோம், "ஆரோக்கியமான உபதேசம் பற்றி தேவன் என்ன சொல்கிறார்". என்று முதலில் நாம் கேள்வி எழுப்பினோம்.

Iதீமோ 1:3-ம் வசனத்திலிருந்து அப்போஸ்தலன் பவுலைக் கொண்டு, வேற்றுமையான உபதேசங்களைப் போதிக்கக் கூடாதென்று தேவன் கட்டளையிட்டுள்ளார் என்று கற்றோம். அதாவது, தேவனுக்கு ஏற்புடையதாக ஒரே ஒரு உபதேசம் தான் இருக்கிறது என்பதே இதன் பொருள்.

இப்படிச் சொல்லுவதை, குறுகிய மனப்பான்மை கொண்டது என்று சிலர் கூறுவது பற்றியும் சொன்னோம். ஆனால் மத் 7:13-15-ல் இயேசு இரண்டு வாசல்கள், இரண்டு வழிகள், இரண்டு நித்திய முடிவுகள் பற்றி சொல்லியுள்ளார் என்றும் பார்த்தோம். பொறுப்பு வந்த எந்த மனிதனும் இந்த இரண்டு வழிகளில் ஏதாவது ஒன்றில் நடந்து கொண்டுள்ளான்.

கேட்டுக்கு அழைத்துச் செல்லும் வாசலும், வழியும் விசாலமாயிருக்கிறது. அநேகர் அதின் வழியாய்ச் செல்லுகிறார்கள் என்று இயேசு சொன்னார். அடுத்து, வாசல் **இடுக்கமும்** வழி குறுகலானதுமானது, அதைக் கண்டுபிடித்து, அதிலே நடக்கிறவர்கள் சிலர். ஆனால், அது நித்திய ஜீவனுக்கு வழிநடத்துகிறது.

இந்த செயல்களினடிப்படையில், இயேசு என்னையும் உங்களையும் கடுமையாக எச்சரிக்கிறார். அவர், நாம் கள்ளத் தீர்க்கதரிசிகளுக்கு எச்சரிக்கையாயிருக்க வேண்டுமென்று கூறுகிறார். அவர்கள் ஆட்டைப்போல் அப்பாவியாகத் தோன்றுவார்கள். ஆனால் நம்மை ஆன்மீக ரீதியில் பட்சித்துப் போடுவார்கள். !

அடுத்து, நம்முடைய இரட்சகர் மத் 7:21-23 வசனப் பகுதியில் சொல்லியுள்ளவைகளை கவனமாக கவனியுங்கள். அங்கே, இயேசு என்னை நோக்கி "கர்த்தாவே, கர்த்தாவே" என்று கூப்பிடுகிற வர்களெல்லாம் பரலோக ராஜ்ஜியத்தில் பிரவேசிப்பதில்லையென்று நமக்கும் புரியும்படி சொல்லியுள்ளார். அது, அவருடைய நாமத்தினாலே, தீர்க்கதரிசனம் உரைத்தோம் என்பவர்களையும், பிசாசுகளைத் துரத்தினோம் என்பவர்களையும் அநேக அற்புதங்களைச் செய்தோம் என்பவர்களையும்

உள்ளடக்கியுள்ளது. இவைகளையெல்லாம் செய்தோம் என்று அவர்கள் சொன்னாலும், இயேசு அவர்களைப் பார்த்து, "நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை, அக்கிரமச் செய்கைக்காரரே என்னைவிட்டு அகன்று போங்கள்" என்று சொல்லுவார்.

இப்படிப்பட்ட வார்த்தைகளை நம்முடைய இரட்சகரிடமிருந்து கேட்பது எவ்வளவு பயங்கரமானது என்பதை உங்களால் எண்ணிப்பார்க்க முடிகிறதா? அப்படிப்பட்டவர்கள் இயேசுவை விட்டு அகன்று போவார்கள். அதாவது, அவர்கள் தங்கள் நித்தியத்தைப் பரலோகில் கழிக்காமல், நரகத்திலே கழிப்பார்கள். இது குறுகிய மனப்பான்மை கொண்டதாக இருக்கிறதே என்று சிலர் சொல்லலாம். ஆனால், இந்த வசனப்பகுதியிலும், பிற பகுதிகளிலும் இது தேவனுடைய தெளிவான உபதேசமாக இருக்கிறது.

அப்படியானால், பரலோக ராஜ்ஜியத்தில் பிரவேசிப்பதற்கு எது முக்கியமானது? பரலோகத்திலிருக்கிற பிதாவின் சித்தத்தின்படி செய்வது தான் முக்கியம் என இயேசு சொல்லியுள்ளார். அவருடைய சித்தமானது, ஒரே உபதேசமாகிய புதிய ஏற்பாட்டில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

மத் 15:8,9-ல், தங்கள் வாயினால் தேவனிடத்தில் சேர்ந்து, தங்கள் உதடுகளால் அவரைக் கனப்படுத்துகிற மக்களைக் குறித்து இயேசு பேசியுள்ளார். அவர்கள் அவரை ஆராதிக்கிறவர்களாக இருந்தார்கள். ஆனால், அவர்களின் ஆராதனை குறித்து என்ன கூறுகிறார் என்பதைத் தெரிந்து கொள்ள அந்த இரண்டு வசனங்களையும் தயவு செய்து படித்துப்பாருங்கள், "அது வீணானது", என்று சொல்லியுள்ளார். அதாவது, அந்த ஆராதனையில் அவர்களுக்கும் பயனில்லை தேவனுக்கும் பயனில்லை.

ஏன் சிலருடைய ஆராதனை வீணானதாயிருக்கிறது? இதற்கு இயேசு இரண்டு காரணங்களைக் கொடுக்கிறார். முதலாவது, அவர்கள் இருதயம் தேவனைவிட்டு விலகியிருக்கிறது. தங்கள் வார்த்தைகளால் அவரைக் கனப்படுத்தினாலும், இதுதான் யதார்த்தம் அதாவது தாங்கள் உண்மையுள்ளவர்களாக இல்லை.

இரண்டாவது, அவர்கள் **மனுஷருடைய கற்பனைகளை உபதேசங்களாகப்** போதிக்கிறார்களென்று நம்முடைய மீட்பர் சொல்லியுள்ளார். அருமையான வாசகரே, இதை ஜாக்கிரதையாய்க் கவனியுங்கள்! உபதேசம் மிகவும் முக்கியமானது என்று இயேசு சொல்லியுள்ளார். தேவனிடத்திலிருந்து வந்த உபதேசமாக இல்லாமல்,

மனுஷரிடத்திலிருந்து வந்த உபதேசங்களை நாம் போதிக்கிறவர்களாகவும், அதற்குக் கீழ்ப்படிகிறவர்களாகவுமிருந்தால், அது நம்முடைய ஆராதனையை வீணானதாக்கி விடுகிறது. நாம் தேவனுக்கு வீணான ஆராதனை செய்கிறவர்களாயிருந்தால், நாம் பரலோகம் செல்ல முடியுமென்ற நம்பிக்கையைப் பெறமுடியாதென்பதை நானும், நீங்களும் கண்டிப்பாக அறிந்து கொள்ள வேண்டும்.

அடுத்து, IIதீமோ 1:13-ல் "ஆரோக்கியமான வசனங்களின் சட்டத்தைக் கைக்கொண்டிரு" என்று தேவன் கட்டளையிடுகிறார். சட்டம் அல்லது மாதிரி என்றால் என்ன? அங்கே சட்டம் அல்லது மாதிரி என்பது, அப்போஸ்தலன் பவுலாலும், மற்றும் முதல் நூற்றாண்டிலிருந்த அப்போஸ்தலர்களாலும், தீர்க்கதரிசிகளாலும் பேசப்பட்ட அல்லது வெளிப்படுத்தப்பட்ட ஆரோக்கியமான வசனங்கள்தான். அந்த ஆரோக்கியமான வசனங்கள் புதிய ஏற்பாட்டில் எழுதப்பட்டுள்ளது.

ஆகையால், இயேசுவின் புதிய ஏற்பாட்டை நாம் இறுகப்பிடித்துக் கொள்வது அவசியம். அதுதான் நமக்கான ஒரே உபதேசம். அதிலிருந்து விலக நாம் ஒரு போதும் துணியக்கூடாது. ஆம், நாம் தேவனைப் பிரியப்படுத்த வேண்டுமானால் இப்படித்தான் நடந்து கொள்ளவேண்டும்.

IIதீமோ 2:15-ல் தேவன் சொல்லியுள்ள வசனத்தை, நானும், நீங்களும் அடிக்கடி தியானம் செய்கிறவர்களாக உள்ளோமா? அங்கே, நானும், நீங்களும் தேவனுக்கு முன்பாக உத்தமனாக இருக்கும்படி ஜாக்கிரதையாயிருக்க வேண்டுமென்று சொல்லியுள்ளாரே. அந்த வசனத்தின்படி, நாம் தேவனுக்கு முன்பாக எப்படி உத்தமனாக இருக்க முடியும்.

நானும், நீங்களும் வெட்கப்படாத **ஊழியக்காரனாக** இருக்க வேண்டுமென்று தேவன் விரும்புகிறார். அங்கே, தேவன் எந்தவொரு குறிப்பிட்ட வேலைப் பற்றிப் பேசுகிறார்? நாம் சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிப்பதற்கு பிரயாசை எடுக்க வேண்டுமென்று எதிர்பார்க்கிறார். நாம் அப்படிச் செய்தால், அவருக்கு முன்பாகவும், நம்மைச் சுற்றியுள்ளவர்களுக்கு முன்பாகவும் நாம் வெட்கப்பட்டுப் போகத் தேவையில்லை. ஆனால், நாம் அப்படி முயற்சிக்கவில்லையானால் என்ன ஆகும்? நாம் அவருக்கு முன்பாகவும், மற்றவர்களுக்கு முன்பாகவும் **வெட்கப்பட்டுப் போவோம்.**

இங்கேயும், மற்ற இடங்களிலும் தேவன் சொல்லியிருப்பதைப் பார்க்கும்போது, அவருடைய வார்த்தைகளைக் கையாளுவதற்கு

நிதானமான, முறையான வழியும் இருக்கிறது. நிதானமற்ற முறையற்ற வழியும் இருக்கிறதென்று, நமக்குத் தெரிய வேண்டும். உபதேசம் தேவனுக்கு முக்கியமானதாயிருக்கிறபடியால் அது நமக்கும் முக்கியமானதாக இருக்கவேண்டும்.

ஆவியானவரால் ஏவப்பட்டு எழுதின பவுல், IIதீமோ 4:1-4 வசனப்பகுதியில், ஒரு கட்டளை கொடுக்கிறார். பவுலைக் கொண்டு தேவன் என்ன சொல்லுகிறார் என்பதை சில நிமிடம் எடுத்து வாசிப்போம்.

இவ்வசனங்களில், அவர் நியாயத்தீர்ப்பைக் குறித்து பேசுவதால், இது முக்கியமான பகுதியாகிறது. அதாவது, தேவன் இங்கே கட்டளையிடுபவைகள் நம்முடைய நித்தியத்தோடு சம்பந்தப்பட்டவை களாயிருக்கிறது. ஆகையால் இது அதிமுக்கியமானது

இங்கே கொடுக்கப்பட்டிருக்கும் கட்டளை என்ன? **திருவசனத்தைப்** பிரசங்கி. நாம் நமக்கு இஷ்டமான எந்த வார்த்தையையும், உபதேசத்தையும் போதித்துவிட முடியாது என்பதைக் கவனியுங்கள் நாம் இயேசு கிறிஸ்துவின் புதிய ஏற்பாட்டில் வெளிப்படுத்தப்பட்டுள்ள ஆரோக்கியமான உபதேச வசனங்களை மாத்திரம் போதிக்க வேண்டும்.

இந்த வசனங்களில், தேவன் ஒன்றை முன் குறித்திருக்கிறார். அது ஆரோக்கியமான உபதேசத்தைப் பொறுக்க மனதில்லாத காலம் வரும் என்பது. தேவனுடைய விருப்பத்தைப் பற்றிக் கவலைப்படாமல், தங்கள் விருப்பத்தைப் பின்பற்றுவர். அவர்கள் சத்தியத்துக்குச் செவியை விலக்கி கட்டுக்கதைகளுக்குச் சாய்ந்து போவார்கள். புதிய ஏற்பாட்டின் சத்தியத்தில் நாட்டம் கொள்ளாமல், செவித்தினவுள்ளவர்களாகி, தங்கள் சுய இச்சைகளுக்கேற்ற போதகர்களை தங்களுக்குத் திரளாகச் சேர்த்துக் கொள்ளுவார்கள்.

இன்றைக்கும் அநேகர் அப்படிப்பட்டவர்களாயிருப்பது, கவலை தரக்கூடிய ஒன்றாக இருக்கிறது. இந்த வசனங்களில், தேவன் கட்டளையிட்டுள்ளபடி, நீடிய பொறுமையோடும், ஆரோக்கியமான உபதேசத்தோடும் கடிந்துகொண்டு, கண்டனம் பண்ணி, புத்தி சொல்லக்கூடிய போதகர்களை அவர்கள் விரும்புவதில்லை. பாவம் நேரடியாக சுட்டிக்காட்டப்பட்டு, கடிந்து கொள்ளப்படுவதை அவர்கள் விரும்புவதில்லை. மாறாக அவர்கள் சகல பாவங்களிலும் தங்களை வெகுவாக ஈடுபடுத்தியிருந்தாலும் "அதெல்லாம் ஒன்றுமில்லை" என்று சொல்லவேண்டுமென்று விரும்புகிறார்கள். எனக்கன்பானவர்களே, அவைகள் அப்படியிருக்கலாகாது.

தீத்து ஒன்றாம் அதிகாரம் 5-ம் வசனம் தொடங்கி ஒவ்வொரு பிராந்திய சபையிலும் மூப்பராக ஊழியஞ் செய்கிறவர்களுக்கு இருக்க வேண்டிய தகுதிகள் மற்றும் பொறுப்புகள் பற்றி தேவன் எடுத்துரைக்கிறார். அங்கே, உண்மையான வசனத்தை நன்றாய்ப் பற்றிக்கொள்ள வேண்டும் என்று கூறுகிறார். அத்தோடு மூப்பர்கள் "ஆரோக்கியமான உபதேசத்தினாலே புத்தி சொல்லவும் எதிர்பேசுகிறவர்களைக் கண்டனம் பண்ணவும் வல்லவனாயிருக்க வேண்டுமெனக் கூறியுள்ளார்."

மறுபடியுமாக, ஆரோக்கியமான உபதேசத்திற்கும், அதை முறையாகப் பயன்படுத்துவதற்கும் தேவன் கொடுக்கும் முக்கியத்துவத்தைப் பார்க்கிறோம். ஏன் தேவன் இதை அதிகமாக வலியுறுத்துகிறார்? ஏனெனில் உலகத்தில் வஞ்சிக்கிறவர்களும், தவறாகப் போதிக்கிறவர்களும் அநேகர் இருக்கிறார்கள் என்று கூறுகிறார். தாங்கள் கடைபிடிக்காத அநேக காரியங்களை அவர்கள் போதிக்கிறார்கள். அதுமாத்திரமல்ல, தகாதவைகளை உபதேசித்து முழுக்குடும்பங்களையும் கவிழ்த்துப்போடுகிறார்கள்.

அப்படிப்பட்டவர்களுக்கு தேவன் என்ன செய்ய வேண்டுமென கட்டளை கொடுக்கிறார்? அவர்களுடைய வாய் அடக்கப்படவேண்டும் என்கிறார். "........ அவர்கள் விசுவாசத்தில் ஆரோக்கியமாக இருப்பதற்கு, இவர்களை நாம் கடுமையாகக் கண்டனம் செய்ய வேண்டும்." "சத்தியத்திலிருந்து விலகச் செய்கிற மனித கற்பனைகளை" விட்டு அவர்கள் விலக வேண்டுமென நாம் ஊக்கப்படுத்த வேண்டும். இந்த வசனப் பகுதிகளின் மூலமாக, உபதேசம், நித்திய காலத்திற்கும் மிகவும் முக்கியமானதென தெள்ளத் தெளிவாகச் சொல்லுகிறார்.

இது குறித்துப் பேசுகிற இன்னொரு வசனம் தீத் 2:1 அங்கே, நாம் **ஆரோக்கியமான** உபதேசத்தைப் பேச வேண்டுமெனக் கட்டளை கொடுக்கிறார். மேலே நாம் "ஆரோக்கியம்" என்ற வார்த்தையைப் பல வசனங்களில் கண்டோம். ஆகவே இது ஒரு முக்கியமானதாயிருக்கவேண்டும். "ஆரோக்கியம்" என்ற மொழியாக்கம் செய்யப்பட்டுள்ள கிரேக்க வார்த்தையின் பொருள் "முழுமையானது". இதன் பொருள், உண்மையானது, அழியாதது, தவறில்லாதது என்பது. ஆகவே, தேவன் நானும், நீங்களும் ஆரோக்கியமான உபதேசத்தை, அதாவது தவறுகளற்ற, அழியாத உபதேசத்தைப் பேசவேண்டுமென்று கட்டளை கொடுக்கிறார். மனிதர்கள் அந்த உபதேசம் முக்கியமல்ல என்று சொல்லுகிறார்கள். அப்படிச் சொல்வதின் மூலம், தேவன் சொல்லுவதிலிருந்து முரண்படுகிறார்கள்!.

ஆரோக்கியம் என்பதற்கான தேவச்சித்தம் என்னவென்பதை இன்னும் கூட தெளிவாகத் தெரிந்து கொள்வதற்கு Iபேது 4:11-ல் அவர் கொடுத்திருக்கும் கட்டளையை நன்றாய்க் கவனியுங்கள். "ஒருவன் போதித்தால் தேவனுடைய வாக்கியங்களின்படி போதிக்கக்கடவன்", இங்கே "வாக்கியம்" என்பது தெய்வீக வார்த்தைகள். ஆகையால், நாம் தேவனைப் பிரியப்படுத்துவதற்கு, நம்முடைய வார்த்தைகளையோ, எந்தவொரு மனிதனுடைய வார்த்தைகளையோ பேசாமல், **அவருடைய** வார்த்தைகளைப் பேசவேண்டும்.

நாம் இதுவரை கவனித்த வசனங்களின் மூலமாக, நாம் போதிக்கும் போது, தேவன் ஆரோக்கியமானவைகள் என்று எவைகளைச் சொல்லியிருக்கிறாரோ அவைகளை மாத்திரம் போதிப்பதற்குக் கவனமாயிருக்க வேண்டுமென்று நிச்சயமாகவே தெரிந்து கொண்டோம். ஆகவே, இந்த கட்டளைக்கும், பிற கட்டளைக்கும் அப்படியே கீழ்ப்படிந்து அதன் மூலமாக தேவனைப் பிரியப்படுத்துவதற்கு, நாம் ஒவ்வொருவரும் நம்முடைய முழு பெலத்தோடு முயற்சி செய்வோமாக !

## விட்டு விலகு

1. **பிரிவினைகளையும் இடறல்களையும் உண்டாக்கு கிறவர்களை விட்டு விலகு ரோமர் 16:17**
2. **புத்தியீனமான தர்க்கங்களையும் வாக்கு வாதங்களையும் விட்டு விலகு தீத்து 3:9**
3. **வேத புரட்டனுக்கு இரண்டொருதரம் புத்தி சொன்ன பின்பு அவனை விட்டு விலகு தீத்து 3:10**
4. **ஆத்துமாவுக்கு விரோதமாய்ப் போர் செய்கிற மாம்ச இச்சைகளை விட்டு விலகு I பேதுரு 2:11**
5. **வேத பக்தியின் வேஷம் தரித்து அதன் பெலனை மறுதலிக்கிறவர்களை விட்டு விலகு 2 தீமோ 3:1-5**
6. **ஒழுங்கற்று நடக்கிற எந்த சகோதரனையும் நீங்கள் விட்டு விலக வேண்டும் 2 தெச 3:6**
7. **பொல்லாங்காய்த் தோன்றுகிற எல்லாவற்றையும் விட்டு விலகுங்கள் I தெச 5:22**

# அன்பு வேதனை கொடுக்கும்

சில வேலைகளில் அன்பு வேதனை கொடுக்கக்கூடியதாய் இருக்கிறது. இளம் வாலிபப் பருவத்தின் வழியாகத் தங்கள் பிள்ளைகளை வழி நடத்தும் போது, அதிலுள்ள கடினங்களும் பிரச்சனைகளும் அவர்களுக்கு வேதனையைக் கொடுக்கிறது. அன்பு வேதனைகளையும் கவலைகளையும் கொண்டு வந்தாலும், அன்பில்லாத வாழ்க்கை வாழ்க்கையாயிருக்க முடியாது. அன்பு செலுத்துவது என்பது காயப்படுத்துவதற்கு ஏதுவான நிலைதான். நீங்கள் எதை யாவது நேசித்தால் உங்கள் இருதயம் பிரியப்படலாம். அல்லது நொறுங்கிப் போகலாம். அன்பு செலுத்துவது என்பது துணிந்து செயல் படுவதாகும். நமது இருதயத்தை வெளியரங்கமாக்குவதாகும். சில வேலைகளில் அது வேதனை கொடுக்கும்.

மாம்சத்துக்குரிய ஒரு நல்ல குடும்பம் சகோதர அன்பில் சந்தோஷமாயிருப்பது போலவே, நமது ஆவிக்குரிய குடும்பமும் சகோதர அன்பில் களி கூறுவதற்காக தேவன் திட்டமிட்டு அதை அவருடைய குமாரன் இயேசுவைக்கொண்டு வெளிப்படுத்தினார். பிலதெல்பியா என்ற கிரேக்க வார்த்தைக்கு "**சகோதர அன்பு**" என்று பொருள். ஆசியாவில் இருந்த ஏழு சபைகளில் ஒன்று பிலதெல்பியா (வெளி 3:17) அமெரிக்க பெருநகரம் ஒன்றின் பெயர். இதைத் தழுவி "சகோதர அன்பின் நகரம்" என்பதாக வைக்கப்பட்டுள்ளது. பிலதெல்பியாவைப்பற்றி பரிசுத்த ஆவியானவர் வெளிப்படுத்தி யிருப்பதில் வியப்பேதுமில்லை."

இந்த சகோதர அன்பைக்குறித்து எபிரெய ஆசிரியர் கூறுகிறார். (எபி. 13:1) சகோதர சிநேகம் நிலைத்திருக்கக்கடவது என்று வலியுறுத்துகிறார். அதாவது, சகோதர அன்பு எப்பொழுதும் நம்மில் நிலைத்திருக்க வேண்டும். (ரோ 2:10) இந்த சகோதர சிநேகம் தேவனால் நமக்குப் போதிக்கப்பட்டுள்ளது. அது மாயமற்ற சகோதர சிநேகமாயிருக்க வேண்டும். (I தெச 4:9-11) (I பே. 1:22) தாவீது யோனத்தான் சிநேகத்தை (அன்பை) ஒரு ஸ்தீரீயின் சிநேகத்தைப் பார்க்கிலும் அதிகமாயிருந்தது என்று பரிசுத்த ஆவியானவர் இங்கே

நமக்கு தெளிவுபடுத்துகிறார் (II சாமு 1:26), (I சாமு 18:1-3) ஆகவே தான், தாவீது, யோனத்தானின் மரணத்தின் நிமித்தம் மிகவும் வேதனையும் துக்கமும் அடைந்திருந்தார். ஆகவே தான் தாவீது தன் சங்கீத புத்தகத்திலே இப்பேர்பட்ட சகோதர சிநேகத்தைக் குறித்து அழகாக படம்பிடித்துக் காட்டியிருக்கிறார். (சங் 133:1-3) இதோ, சகோதரர்கள் ஒருமித்து வாசம் பண்ணுகிறது எத்தனை நன்மையும் எத்தனை இன்பமுமானது? ஐக்கியம் சந்தோஷம் நன்மையுமானது. சில விஷயங்கள் நமக்கு நன்மையானவை. ஆனால் சந்தோஷமானவையல்ல. எடுத்துக்காட்டாக நற்கிரியைகள் (தீத்து 3:14) மற்றும் சிட்சை (நீதி 13:24) (எபி 12:11) சில விஷயங்கள் நமக்கு சந்தோஷமானவைகள். ஆனால் நன்மையானவையல்ல. பாவசந்தோஷம் (எபி 11:25) ஒரு விஷயம் நமக்கு சந்தோஷமளிப்பதாகவும், நன்மையாகவும் இருக்கிறது. அது ஏகசிந்தனையாகவும் ஏக ஆத்துமாவாகவும் சகோதரர்கள் ஒருமித்து வாசம் பண்ணுவதேயாகும். ஐக்கியத்தின் (அன்பில்) சந்தோஷத்தைக் காண்பதற்கு, நமக்கு உதவி செய்வதற்காக பரிசுத்த ஆவியானவர் வெள்ளைப்போளம், இலவங்கம், கருவாப்பட்டை ஆகியவை களுடன் கலக்கப்பட்ட சுகந்த வாசனைத் தைலத்தை விளக்கப் பொருளாக பயன்படுத்துகிறார். (யாத் 30:23-33) இக்கலவையானது, பரிமளக்காரன் செய்வது போல கட்டப்பட்ட பரிமள தைலமாகிய சுத்தமான அபிஷேக தைலமானது சகோதர ஐக்கியத்தின் (அன்பின்) சுகந்த வாசனைக்கு ஒப்பிடப்பட்டது.


சகோதர ஒருமைப்பாட்டைப் புகழ்ந்துரைக்க இரண்டாவது விளக்கம் ஒன்று தாவீதினால் பயன்படுத்தப்பட்டது. எர்மோன் மலையிலிருந்து (சுமார் 9,200 அடி உயரம் கொண்டது), பனி உருகும் போது, தெற்கு முகமாக 120 மைல்கள் (2500 அடி உயரம் கொண்டது) பனித்துளிகளாக இறங்கும். எருசலேமிலிருந்த யூதர்கள் தங்கள் நிலங்களில் பனித்துளிகளையும், மலர்களையும் பார்க்கும் போது நன்மையும், சந்தோஷமும் அவர்களிடம் எதிரொலிக்கும். சிந்தையுள்ள எந்த ஒரு மனிதரும், சகோதரர்கள் ஒருமித்து வாசம் செய்வதைக் கண்டு மகிழ்வர். சகோதரர்கள் இணைந்து வாழ்ந்து பணிபுரியாத அழகற்ற நிலை, தாயின் சகோதரனைக் கொலை செய்தல், மற்றும் இருபது வயதுள்ள இஸ்மவேல் தனது சகோதரன் பால்குடி மறக்கப்பட்டபோது ஏளனம் செய்தல் (ஆதி 4:8-21:8-9) ஆகிய நிகழ்ச்சிகளில் பார்க்கிறோம்.

சகோதரருக்குள் விரோதத்தை உண்டுபண்ணுகிறவன் கர்த்தருக்கு அருவருப்பானவன் (நீதி 6:16-19) இப்படிப்பட்ட எச்சரிக்கைகளும் முன் உதாரணங்களும் இருந்தாலும், ஒருவரையொருவர் கடித்து பட்சிக்கிற சகோதர சகோதரிகளும் இருந்து கொண்டு தான் வருகிறார்கள். (கலா 5:5-2.4) ஒன்று கூடி வாழ்வது முக்கியமானது போலவே, பிரிந்து வாழ்வதைக் காட்டிலும் மோசமான சில விஷயங்களும் உள்ளன. நாயும், பூனையும் போல வாழ்ந்து ஒருவரையொருவர் கடித்து பட்சிக்கும் போது, இரு சகோதரர்களும் தங்கள் ஆத்துமாக்களை இழந்து விடுகின்றனர். ஞானமுள்ள ஆபிரகாம் லோத்தின் மக்களோடு இணைந்திருந்தால் என்னவாகும் என்பதை உணர்ந்து, நட்புடன் பிரிந்து போக ஆலோசனை கூறினார். பவுலுக்கும் பர்னபாவுக்கும் பிரச்சனை வந்தபோது அவ்விரண்டு மாபெரும் சகோதரர்களுக்குக் கூட ஏகசிந்தை யில்லாத போது அதிக நன்மை நடக்கும்படியாக ஒரு பிரிவு உண்டாயிற்று.

தேவன் உலக தோற்றத்துக்கு முன்னே நம் மேல் அன்பு வைத்தார். (I யோ 4:7-12) அந்த அன்பை தம்முடைய ஒரே பேரான குமாரன் இயேசு கிறிஸ்துவை சிலுவையிலே நமக்காக பலியாக ஒப்புக்கொடுத்து அந்த அன்பை வெளிப்படுத்தினார். நமது ஆண்டவர் இயேசு கிறிஸ்து நம் மீதுவைத்த அன்பினாலே அவர் வேதனைப்பட்டார். அவமானப் பட்டார். நிந்திக்கப்பட்டார். நீங்கள் என் அன்பிலே நிலைத்திருங்கள். நான் உங்களில் அன்பாயிப்பது போல நீங்களும் ஒருவருக்கொருவர் அன்பாயிருங்கள். (I கொ 13:4-7) அன்பு சகலத்தையும் தாங்கும். சகலத்தையும் சகிக்கும். தேவன் உலகத்தில் அன்பு வைத்து தம்முடைய அன்பான குமாரன் இயேசு கிறிஸ்துவை பலியாகக் கொடுத்தார். கிறிஸ்து நம்மேல் வைத்த அன்பு தான் அவருக்கு மரணவேதனையைக் கொடுத்தது. நாமும் ஒருவருக்கொருவர் அன்பு செலுத்தி சகோதர சகோதரிகள் மூலம் வரும் இடறல்கள், பெலவீனங்கள் வாக்குவாதங்கள், சண்டைகள், பிரச்சனைகள், வேதனைகள் எல்லாவற்றையும் அன்பின் நிமித்தம் தாங்கிக் கொண்டு அன்பு செலுத்த வேண்டும். அன்பு செலுத்துவதைவிட, செலுத்தாமலிருப்பதற்கே நாம் அதிகக் கிரயம் செலுத்த வேண்டியிருக்கும்.

**யோசுவா செல்வம்**

**அரக்கோணம்.**



## HEAR THE VOICE OF TRUTH ON RADIO SRILANKA

| LANGUAGE | DAYS | TIME P.M. | ADDRESS | SPEAKER |
|---|---|---|---|---|
| HINDI | Sunday<br>Thursday | 6.45 - 7.00 a.m. | Box. 3815<br>New Delhi - 110049 | Sunny David |
| TELGU | Monday<br>to Friday | 5.30-5.45 | Box. 80<br>Kakinada - 533 001 | Joshua<br>Gootam |
| TAMIL | Sunday<br>Thursday<br>Friday | 6.45-7.00 p.m.<br>5.45-6.00 p.m.<br>5.30-5.45 p.m. | Box. 8405<br>Bangalore - 560<br>084 | P.R. Swamy |
| MALAYALAM | Friday | 3.45-4.00 p.m. | Sunny Meads Lane,<br>Behind Sansrit<br>College,<br>Trivandrum-695 034 | P.K. Varghese |

## PLEASE WATCH

ETC TV

Every Sunday from 6.00 to 6.30 a.m.

for a Christian Programme in Hindi

Please write to these address for Bible Correspondence Courses, Magazines and other Christian Litertures

ALL OF THESE PROGRAMMES ARE SPONSERED BY THE CHURCH OF CHRIST

Postal Regn. No. TN / WR / ERD / 77 / 2003
Licensed to Post without pre payment
TN / WR / ERD / 03 / WRP / 2003
Registered News Paper
RNI No. 47661 / 87 - New Delhi
Annul Subscription Rs.30/-

# அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்றுக்
கொள்ள விரும்புவோருக்கு

# ஓர் இனிய செய்தி

ஆம், மிகத் தேர்ந்த முறையில் ஒழுங்கு செய்யப்பட்ட
அஞ்சல் வழி வேதாகமப் பயிற்சியில் நீங்கள்
விரும்பினால் சேர்ந்து பயன் பெறலாம்.
இது 15 பாடங்களைக் கொண்ட


**ஓர் இலவச பயிற்சி.**

இப்பயிற்சியை வெற்றிகரமாக முடிப்பவர்களுக்கு
சான்றிதழ் வழங்கப்படும்.

**பயிற்சியில் சேர விரும்புவோர் தொடர்பு கொள்ள
வேண்டிய முகவரி**

இயக்குனர்,
**அஞ்சல் வழி வேதாகமக் கல்வி**
த.பெ. எண் - 27, காங்கேயம்.
தமிழ்நாடு. இந்தியா.


திருமறை ஆசான் இதழின் ஆசிரியர் திருமறை தியானம் நிகழ்ச்சியில் நற்செய்திப்பேருரை ஆற்றுகிறார்.



## ராஜ் டிவி யில்
## திருமறை தியானம்

பிரதி புதன்கிழமை காலை 6.05 - 6.20 மணிக்கு

## தமிழன் டிவி யில்
## திருமறை தியானம்



பிரதி சனிக்கிழமை காலை 7.15 - 7.30 மணிக்கு

Published by Church of Christ, Kangayam.
Printed at Konar Printers, Madurai - 625 012. Editor. S. Rajanayagam.